விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 316 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 14 செவ்வாய்க்கிழமை (31.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

யாழ்.போதனாவில் ஆயிரம் பேருக்கு

## கண்புரை சத்திரசிகிச்சை

5 தினங்கள் முன்னெடுக்கப்படவுள்ளது



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் ஆயிரம் பேருக்கு கண்புரை சத்திரசிகிச்சை முன்னெடுக்கப்படவுள்ளது.

5 தினங்கள் குறித்த சிகிச்சை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

15

சம்பள உயர்வை வலியுறுத்தி

## நாடு முழுவதும் அரச ஊழியர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்




(கொழும்பு)

சம்பள உயர்வை வலியுறுத்தி நாடு முழுவதும் அரச ஊழியர்களால் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரி

15

வரவு செலவுத் திட்டத்தில்

# அரச ஊழியர்களின் சம்பளம் உயர்த்தப்படும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அனைத்து அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சஜித்தால் நாட்டுக்கு எதுவும் செய்ய முடியாது

ஹரின் சாடல்

(கொழும்பு)

சஜித் பிரேமதாஸவால் நாட்டுக்கு எதுவும் செய்ய முடியாது என்பதை ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் நன்றாக உணர்ந்துவிட்டதால்ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் பலர்

02

## மின்சாரத்துறை சீர்திருத்தம் அமைச்சரவையில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

உத்தேச மின்சாரத் துறை சீர்திருத்த சட்டமூலம் நேற்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தனது

15

வெள்ளை வானில் வந்தவர்களால்

## வடமராட்சி வத்திராயனில் பணம், நகை கொள்ளை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வத்திராயனில் வெள்ளை வானில் வந்தவர்கள் வீடு புகுந்து 5 இலட்ச ரூபாய் பணம் மற்றும் 6 அரை பவுண் சங்கிலி என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு, வத்திராயன்பகுதியில்உள்ளவீடொன்றினுள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெள்ளை நிற வானில் சென்ற கும்பல் ஒன்றும் வீட்டி

15

## ஐ.எம்.எப்பின் முன்மொழிவிலேயே முழுப் பாதீடும் உருவாகியுள்ளது

ஜே.வி.பி குற்றச்சாட்டு



(கொழும்பு)

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் முற்று முழுதாக சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் பததும்பர மாநாட்டில்

15

ரூ.30 இலட்சம் பெறுமதியான

## ஐம்பொன்னினாலான சிலை ஐந்து சந்தியில் மீட்பு



(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் திருடப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்ட 30 லட்சம் ரூபாய் பெறுமதியானது என மதிப்பிடப்பட்ட ஐம்பொன் சிலை பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

15

நவம்பர் 6 வரை

## வடக்கில் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும்

15

வடக்கில் நியமிக்கப்பட்ட

## தென்னிலங்கையர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள்

அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் ஒரு லட்சம் வேலை வாய்ப்பில் நியமிக்கப்பட்ட தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தொல்லியல் திணைக்களம் உட்பட

02

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஐரோப்பிய ஒன்றிய குழு இலங்கைக்கு விஜயம்

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் மற்றும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை வழங்கல் குறித்து ஆராய்வதற்காக நால்வர் அடங்கிய ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளது.

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகைக் காலம் முடிவுக்கு வந்திருக்கும் நிலையில், அதனைத் தொடர்ந்து பெற்றுக் கொள்வதற்கு இலங்கை உள்ளிட்ட நாடுகள் மீண்டும் விண்ணப்பித்துள்ள நிலையில் முக்கிய நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டனவா என பரிசீலிக்கப்பட்டு தீர்மானம் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கைக்கு ஏற்கெனவே ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை வழங்கப்பட்டபோது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கவேண்டும் அல்லது சர்வதேச நியமங்களுக்கு அமைவாக அதனைத் திருத்தியமைக்க வேண்டும் என பிரதான நிபந்தனையாக முன்வைக்கப்பட்டது.

இருப்பினும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவரும் நிலையில் அச்சட்டமூலங்களின் உள்ளடக்கத்திற்கு கடுமையான எதிர்ப்புக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தில் பின்லாந்து, போலந்து, ஜேர்மனி மற்றும் லிதுவேனியாவை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்றக் குழுவினர் நாட்டுக்கு வருகைதரவுள்ளனர்.

சுமார் ஒருவார காலம் நாட்டில் தங்கியிருப்பதற்குத் திட்டமிட்டிருக்கும் அவர்கள், அக்காலப்பகுதியில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (ம-7)


## துயர் பகிர்கின்றோம்



எமது பௌதீகவியல் ஆசிரியர் திரு. இ.சேயோன் அவர்களின் தந்தையார்

அமரர் **கணபதிப்பிள்ளை இராமச்சந்திரன்**

அவர்கள் நேற்று மாலை மறைந்த செய்தியறிந்து துயரடைகின்றோம். அவரது மறைவினால் துயருற்றுள்ள குடும்பத்தினர்க்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கல்லூரிச் சமூகம்**
**யா/மகாஜனக் கல்லூரி**
**தெல்லிப்பளை**

(C-7530)


## தென்னிலங்கை...

வடக்கு மாகாணத்தில் உள்ள பல அரச நிறுவனங்களில் ஒரு லட்சம் வேலை வாய்ப்பின் கீழ் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படுவது தொடர்பாக ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று(நேற்று) காலை பிரதமரோடு கலந்துரையாடி இருந்தேன். வடக்கு மாகாணத்தில் இருக்கக்கூடிய பெரும்பான்மை மக்கள் தமிழ் பேசுகின்ற மக்கள். தொழில் வாய்ப்புகளை வழங்குகின்ற போது தமிழ் மக்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

கடந்த காலத்தில் சில தவறுகள் நடந்திருக்கின்றன. அது உடனடியாக களையப்பட வேண்டும் என்று சொல்லி இருந்தேன் இதற்கு முன்னர் அமைச்சரவையிலும் அவரோடு கலந்துரையாடி இருக்கின்றேன்.

ஒரு இலட்சம் வேலை வாய்ப்பில் தென்னிலங்கையில் இருந்து நியமிக்கப்பட்டு இங்கு வருவதாக அறிந்து தான் அதனை உடனடியாக நிறுத்துமாறும், இங்கிருக்கின்றவர்களுக்கு தான் முன்னுரிமை வழங்க வேண்டும் என்று சொல்லியபோது அவர் ஏற்றுக் கொண்டிருக்கின்றார். அடுத்த அடுத்த கிழமைகளில் இவை நடைமுறைக்கு வரும்.

தற்போது வந்தவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள். அவர்களுக்கு இங்கு மொழிப் பிரச்சினை, தங்குமிட பிரச்சினைகள் இருக்கின்றது, இதனால் அதற்கே அவர்கள் உழைப்பது செலவுக்கே போய்விடும்.

இது ஒரு அறியாமையில் செய்யப்பட்ட விடயமா? அல்லது உள்நோக்கத்தோடு செய்யப்பட்ட விடயமா? என்பது வேறு. என்னை பொறுத்தவரையில் நான் இதற்கு இடம் கொடுக்க மாட்டேன். கடந்த காலத்தில் நல்லாட்சி என்ற பெயரில் இங்கு நடந்தது போன்று நான் இங்கு நடக்க விடமாட்டேன்.

ஏற்கனவே தொல்லியல் திணைக்களத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் நியமிக்கப்பட்ட தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் தொடர்பாக மீண்டும் கேள்வி எழுப்பிய போது அவர்களும் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றார். (ம-7,33,104)

## சஜித்தால்...

ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவதற்கான சாத்தியம் காணப்படுவதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் ஜனாதிபதியாகப் பதவி வகிப்பார்.

அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் அவர் அமோக வாக்குகளால் வெற்றியடைவார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் மட்டுமல்ல எதிரணியில் உள்ள ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பார்கள் என தெரிவித்துள்ளார். (ம-7)


# மரண அறிவித்தல்



தோற்றம்
15.11.1950

மறைவு
30.10.2023

## பாலசிங்கம் வெற்றிவேல்

(ஓய்வு நிலை அதிபர் – யா/ கொற்றாவத்தை அ.த.க. பாடசாலை)

அல்வாய் தெற்கு சாரதாவைப் பிறப்பிடமாகவும் அல்வாய் தெற்கு ரதிமஹாலை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் வெற்றிவேல் அவர்கள் நேற்று (30.10.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - சாரதாமணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - தங்கப்பொன் தம்பதிகளின் அன்பு மருமகனும் ரதியின் அன்புக் கணவரும் லி.நிருத்திகா(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், பிரதேச சபை பருத்தித்துறை), வெற்றிதுஸ்யந்தன் (ஊடகவியலாளர்), வெற்றிசிந்துஜன் (நுண்கலைமாணி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் லிங்கனதாஸ்(அதிபர் யா/இமையாணன் அ.த.க. வித்தியாலயம்), தாட்சாஜினி(அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச சபை கரவெட்டி), விஜயசாந்தி(நுண்கலைமாணி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆருஷா, ஆகர்ஷன், வைஸ்ணுபிரபாஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் விஜயநாதன் - சாரதாவதி, தர்மரத்தினம் - கலாவதி, மணிவர்ணன்(ஓய்வுநிலை முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்) ஆகியோரின் சகோதரரும் ந.துரைராஜா(சமாதான நீதவான், ஓய்வுநிலை விவாகப் பதிவாளர்) அவர்களின் சகலனும் விக்னேஸ்வரன்(லண்டன்), காலஞ்சென்றவர்களான தவமலர், விஜயநாதன்(ஓய்வுநிலை அதிபர்), தர்மரத்தினம்(முன்னாள் சாலை பரிசோதகர் இ.போ.ச. பருத்தித்துறை) மற்றும் ம.சுசிகலா(ஓய்வுநிலை ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனரும் வி.செந்தூரன் (பீடாதிபதி தகவல் தொழில்நுட்ப பீடம் பல்கலைக்கழகம், வவுனியா), வி.குமரன் (பொறியியலாளர் லண்டன்), வி.துவாரகன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் கரவெட்டி) ஆகியோரின் மாமனாரும் து.ரமேஸ்(பொறியியலாளர் கனடா), து.சுரேஸ்(கனடா), து.சதீஸ் (பொறியியலாளர் கனடா), பத்மராஜன் - மேகலா ஆகியோரின் சிறிய தந்தையும் அ.கீர்த்தனா(சிங்கப்பூர்), ம.ஆராதனா(சினமன் குளோபல் யாழ்ப்பாணம்), கேசவன்(உத்தியோகத்தர் இலங்கை வங்கி) ஆகியோரின் பெரிய தந்தையும் ச.சுதர்சனா(கனடா), க.சங்கீதா(சுவிஸ்), க.சுரேஸ் (சுவிஸ்), அ.பிரியந்தி(ஜேர்மனி), துஸ்யந்தி(ஜேர்மனி), சு.உதயந்தி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யாழ்ப்பாணம்) ஆகியோரின் உடன் பிறவா சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 31.10.2023 செவ்வாய்க்கிழமை மதியம் 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ரதி மஹால், அல்வாய்.
077 711 1855

தகவல்:
குடும்பத்தினர்

(C-7528)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குழுக்களை இல்லாதொழிக்க நடவடிக்கை

## சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

**நாட்டில் திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டு வரும் கும்பல்களின் செயற்பாடுகளை எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் முற்றாக ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.**




கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் இதனை குறிப்பிட்டார்.

திட்டமிடப்பட்ட குற்றங்களில் பெரும்பாலானவை வெளிநாடுகளில் வசிக்கும் குற்றக் கும்பல் செயற்பாட்டாளர்களினால் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறான குற்றச்செயல்களை வழிநடத்தி வந்த முக்கிய 3 நபர்கள் தற்போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எனவே, இந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் வலையமைப்புகளை அடுத்த ஆறு மாதங்களுக்குள் முறையாகக் கட்டுப்படுத்தி ஒழிப்பதற்கான திட்டங்களை தற்போது நடைமுறைப்படுத்தியுள்ளதாக மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார் (5-6)

# சஜித்-ஜேர்மன் பிரதிநிதி சந்திப்பு



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இலங்கைக்கான ஜேர்மன் கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறையின் பிரதம பிரதிநிதி மேரி அன்டோனியா வொன் ஷொன்பெர்னுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

தடைகளை நீக்கி மற்றும் இருதரப்பு வர்த்தகத்தை ஊக்குவிப்பதன் மூலம் அந்நிய நேரடி முதலீட்டு நடவடிக்கைகளில் சிறப்பு கவனம் செலுத்தி, ஜேர்மன் வர்த்தக நிறுவனங்கள் இலங்கையில் முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குச் சாதகமான சூழலை உருவாக்குவது தொடர்பில் கவனம் செலுத்தி இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான ஜேர்மன் கைத்தொழில் மற்றும் வர்த்தக பிரதிநிதிகளின் கூட்டாண்மை விவகாரங்கள்/ ஏற்றுமதி ஊக்குவிப்பு பிரதானி மனிந்த கஜநாயக்க மற்றும் தொடர்பாடல் முகாமையாளர் கேஷலா டயஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (5-6)

# பூஸா சிறை வளாகத்திலிருந்து தொலைபேசிகள் மீட்பு

(கொழும்பு)

காலி - பூஸா சிறைச்சாலை வளாகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட பல பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது குறித்த பொருட்கள் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழைய சிறைச்சாலை கட்டடத் தொகுதியின் ஏ மற்றும் டி பிரிவுகளிலிருந்து 2 கையடக்கத் தொலைபேசிகள், சிம் அட்டைகள் உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைப்பற்றப்பட்ட பொருட்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் விஷேட அதிரடிப்படையின் காலி பிராந்திய கட்டளை அதிகாரியின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (5-6)

# மொட்டுக்கு எதிராகச் செயற்படும் உறுப்பினர்களுக்கு கடும் நடவடிக்கை



(கொழும்பு)

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கு எதிராகச் செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளதாக அக்கட்சியின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் குழுவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதேவேளை, அவர்கள் தொடர்பில் கடுமையான தீர்மானம் எடுக்கப்படும் என்றும் தற்போது சுயேட்சையாகச் செயற்படும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவது ஏற்புடையதல்ல என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சிக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளவர்களை பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்றும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் முக்கிய உறுப்பினர்கள் பசிலிடம் விடுத்த கோரிக்கைக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார். (5-6)

# வருட இறுதிக்குள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு



(கொழும்பு)

நாட்டில் இவ்வருடம் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு இவ்வருட இறுதிக்குள் இழப்பீடு பெற்றுக் கொடுப்பதாக, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் நிலவிய கடும் வறட்சி மற்றும் மழையுடனான காலநிலை காரணமாக சிறுபோகப் பயிர்ச் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் பெரும்போக செய்கையை மேற்கொள்வதற்குரிய நிதி வசதி இல்லாமல் விவசாயிகள் சவால்களை எதிர் நோக்கியுள்ளமை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேயர் நிலப்பரப்பு விவசாய நிலத்துக்கு ஒரு இலட்சம் ரூபா வீதம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (5-6)

# ரூ.1 கோடி பெறுமதியான களைக்கொல்லிகள் மீட்பு

(கொழும்பு)

கற்பிட்டி கடற்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இயந்திரப் படகொன்றில் இருந்து சுமார் 1 கோடி ரூபாய் பெறுமதி வாய்ந்த தடை செய்யப்பட்ட களைக் கொல்லிகள் நேற்று முன்தினம் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பெயரில் மீனவர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (5-6)

# சட்டவிரோதமாக இஸ்ரேல் சென்றவர்களுக்கு விசா வழங்குவதில் உடன்பாடில்லை-மனுஷ

(கொழும்பு)

சட்டவிரோதமாக இஸ்ரேலில் தங்கியிருந்த இலங்கையர்களுக்கு விசா வழங்குவதில் தமக்கு உடன்பாடில்லை என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

**இஸ்ரேலில் இராணுவ மோதல்களுக்கு மத்தியில் விசா இன்றி இருப்பவர்கள் இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதரகத்துக்கு தகவல்களை வழங்குமாறு வெளிவிவகார அமைச்சு முன்னதாக தெரிவித்திருந்தது.**

இதன்படி, விசா புதுப்பித்தல் தொடர்பாக இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு சுமார் 2 ஆயிரம் கோரிக்கைகள் வந்துள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.


**விசா இன்றி இஸ்ரேலில் தங்கியுள்ளவர்களுக்கு விசா வழங்கும் செயற்பாட்டுக்கு தாம் ஆட்சேபனை தெரிவிப்பதாகவும் இலங்கையின் சட்டத்துக்கு புறம்பாக வெளிநாடு சென்றவர்களுக்கு விசா வழங்குவதை ஏற்றுக் கொள்ள முடியாது என அமைச்சர் தெரிவித்துள்ளார். (5-6)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கை அணியை வீழ்த்தி ஆப்கானிஸ்தான் அபார வெற்றி



உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கையை வீழ்த்தி ஆப்கானிஸ்தான் அபார வெற்றி பெற்றது.

2023ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் 30ஆவது போட்டி நேற்று இடம்பெற்றது. புனேவில் இடம்பெற்ற குறித்த போட்டியில் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகள் மோதின.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதற்கமைய, முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 241 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

அணிசார்பில், அதிகபடியாக பெத்தும் நிஸ்ஸங்க 46 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில், ஆப்கானிஸ்தான் அணியின் ஃபசல்ஹக் பரூக்கி 34 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இந்தநிலையில், 242 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 45.2 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அணிசார்பில் அதிகபடியாக அஸ்மத்துல்லா உமர்சாய் 73 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில், இலங்கை அணியின் தில்ஷான் மதுஷங்க 48 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

(ம-7)



# உலகின் சிறந்த கிரிக்கெட்
## அணித் தலைவராக ரோஹித் சர்மா

உலகிலேயே சிறந்த கிரிக்கெட் அணித் தலைவர் என்ற பெருமையை இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா பெற்றுள்ளார்.


உலகின் சிறந்த கிரிக்கெட் அணித் தலைவர்களாக அறியப்படும் ரிக்கி பொண்டிங், ஹன்சே குரோனியே, ஸ்டீவ் வாஹ், விராட் கோலி, டோனி ஆகியோரின் நிலையை முறியடித்து ரோஹித் சர்மா முதல் இடத்தை பிடித்துள்ளார்.

டெஸ்ட், ஒருநாள் போட்டி, ரி20 என மூன்று வித கிரிக்கெட்டையும் சேர்த்து 100 போட்டிகளுக்கு மேல் தலைவராக இருந்தவர்கள் பட்டியலில் ரோஹித் சர்மா அதிக வெற்றி சதவீதம் பெற்று முதல் இடத்தை பெற்றுள்ளார்.

உலகக்கோப்பை தொடரில் இங்கிலாந்து அணிக்கு எதிராக ரோஹித் சர்மா தலைவராக களமிறங்கினார். அது சர்வதேச போட்டிகளில் தலைவராக அவரது நூறாவது போட்டி ஆகும்.

தனது நூறாவது போட்டியில் 87 ஓட்டங்கள் பெற்று இங்கிலாந்து அணியை 100 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்த முக்கிய காரணமாக ரோஹித் சர்மா காணப்பட்டார்.

இந்த வெற்றியுடன் சேர்த்து ரோஹித் சர்மா தலைவராக நூறு போட்டிகளில் 74 ஆவது வெற்றியை பதிவு செய்தார். இதன் மூலம் தலைவராக 74 சதவிகித வெற்றியை பதிவு செய்து நூறு போட்டிகளுக்கும் மேல் தலைவராக இருந்தவர்களில் முதல் இடத்தை பிடித்துள்ளார்.



1.ரோஹித் சர்மா - 74 சதவீதம்
2.ரிக்கி பொண்டிங் - 70.5 சதவீதம்
3.ஆஸ்கார் ஆப்கன் - 69.6 சதவீதம்
4.ஹன்சே குரோனியே - 67 சதவீதம்
5.ஸ்டீவ் வாஹ் - 66.6 சதவீதம்

இந்திய அணியின் தலைவராக இருந்தவர்களில், விராட் கோலி 213 போட்டிகளில் 135 வெற்றிகளை பெற்று 63.38 சதவீதத்துடனும் டோனி 332 போட்டிகளில் 178 வெற்றிகளை பெற்று 53.61 சதவீதத்துடனும் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)




### உலகக் கிண்ண கிரிக்கெட் - 2023
### புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 6 | 6 | 0 | 12 |
| 2 | தென்னாபிரிக்கா | 6 | 5 | 1 | 10 |
| 3 | நியூசிலாந்து | 6 | 4 | 2 | 8 |
| 4 | அவுஸ்திரேலியா | 6 | 4 | 2 | 8 |
| 5 | ஆப்கானிஸ்தான் | 6 | 3 | 3 | 6 |
| 6 | இலங்கை | 6 | 2 | 4 | 4 |
| 7 | பாகிஸ்தான் | 6 | 2 | 4 | 4 |
| 8 | நெதர்லாந்து | 6 | 2 | 4 | 4 |
| 9 | பங்களாதேஷ் | 6 | 1 | 5 | 2 |
| 10 | இங்கிலாந்து | 6 | 1 | 5 | 2 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதமரின் ஊடகப் பிரிவில் தவறாக பிரசுரமான ஜனாதிபதியின் பெயர்

(கொழும்பு)

இலங்கை பிரதமரின் ஊடகப் பிரிவின் கவனக் குறைவால் ஜனாதிபதியில் பெயரில் சர்ச்சை நிலை ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி தமிழ் விக்கிரமசிங்க என்று தவறாக எழுதப்பட்ட விடயம் சமூக வலைத்தளங்களில் அதிகம் பேசப்பட்டு வருகின்றன.

கடந்த 27ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் ரீட் மாவத்தை றோயல் கல்லூரியில் நடைபெற்ற நூற்றாண்டு விழா தொடர்பான செய்தியில் பிரதமர் அலுவலகத்தால் ஜனாதிபதியின் பெயர் தவறாக பிரசுரிக்கப்பட்டது.

இந்நிலையில் ஊடகவியலாளர் ஒருவர் ஜனாதிபதியின் பணிப்பாளர் பிரதானி சாகல ரத்நாயக்கவிற்கு அறிவித்ததையடுத்து குறித்த பிழை திருத்தப்பட்டது. (5-6)

## மலையகத்துக்கான தொடரூந்து சேவைகள் பாதிப்பு

(கொழும்பு)

மலையகத்துக்கான தொடரூந்து சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தொடரூந்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

பதுளை தொடரூந்து நிலையத்திலிருந்து நேற்று காலை 10.05 இற்கு கொழும்பு - கோட்டை நோக்கி புறப்பட்ட தொடரூந்து 11.45 அளவில் பண்டாரவளை - கினிகம மற்றும் ஹீல் ஓயா ஆகிய தொடரூந்து நிலையங்களுக்கு இடையில் தடம்புரண்டுள்ளது.

இதன் காரணமாக, மலையகத்துக்கான தொடரூந்து சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தொடரூந்தை வழித்தடமேற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டதாக தொடரூந்து திணைக்களம் அறிவித்துள்ளது.(5-6)

## பெயர் மாற்ற அறிவித்தல்

மானிப்பாய் மேற்கு, மானிப்பாயைச் சேர்ந்த மனுவேல் ஏஸ்னாதன் ஆகிய நான் 31.10.2023 இன்று முதல் எனது பெயரை மனுவேல் யேசுநாதன் எனப் பெயர் மாற்றம் செய்கின்றேன். இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் மேற்குறித்த பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

மனுவேல் யேசுநாதன் (7616)


ஏழு நாட்களும் வெற்றி நிச்சயம்

கொவிசெத Govisetha



கொவிசெதவின் 3455 இலக்க சீட்டிழுப்பில் ரூபா 7 கோடிக்கு மேல் பரிசைப் பெற்ற திரு.சி.உபாலி மல்வன்ன- கண்டி

2023 ஆம் ஆண்டில் இதுவரை

சுப்பர் பரிசு வெற்றியாளர்கள்- 04

20 இலட்சம் ரூபா பரிசு வெற்றியாளர்கள் 31

10 இலட்சம் ரூபா பரிசு வெற்றியாளர்கள் 75



அடுத்த அதிர்ஷ்டசாலி நீங்களா?

NLB தேசிய லொத்தர் வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

(சி-2143)


## இராசிபலன்

31.10.2023
ஐப்பசி 14, செவ்வாய்க்கிழமை
திருதியை முன்னிரவு 11.59 மணிவரை

கார்த்திகை முற்பகல் 6.33 மணிவரை
சுபநேரம் -10.33-12.03 மணிவரை
இராகுகாலம்-3.03-4.33 மணிவரை

சந்திராஷ்டமம்- சுவாதி, சித்தாமிர்தம்.

வளவன்

**மேஷம்**: துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், குடும்பத்தேவைகளை நிறைவு செய்ய முற்படுவீர்கள்.

**ரிஷபம்**: பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மிதுனம்**: குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம்.

**கடகம்**: அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்**: வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, ஆரோக்கியமான நாள்.

**கன்னி**: எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், பாக்கிகள் வசூலாகலாம், பயணங்கள் கைகூடும்.

**துலாம்**: மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**விருச்சிகம்**: இரவு பகலாக பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு**: இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், வருங்கால நலன் கருதிய சிந்தனை மேலோங்கும் நாள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

**மகரம்**: பிள்ளைகள் வழியில் பெருமை தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு.

**கும்பம்**: பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**மீனம்**: பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

முட்டாளோடு சண்டையிடுபவர் யார் முட்டாள் என்று தெரியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழிற்கு விஜயம் மேற்கொண்ட உலக வங்கியின் பிரதிநிதிகள் குழு



(அராலி)

இலங்கைக்கான உலக வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் அனஜெடி தலைமையிலான குழுவினர் நேற்று திங்கட்கிழமை கோப்பாய் பிரதேச மருத்துவமனைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

வடமாகாணத்தில் உலக வங்கியின் சுமார் 1400 மில்லியன் ரூபா நிதி பங்களிப்புடன் சுமார் 50 இற்கும் மேற்பட்ட பிரதேச மருத்துவமனைகளின் தொழில்நுட்ப கூடங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

அவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்டதில் கோப்பாய் பிரதேச மருத்துவமனையின் அபிவிருத்திப் பணிகள் நிறைவடைந்த நிலையில் அதனை பார்வையிடும் முகமாக குறித்த குழுவினர் வருகை தந்தனர்.

இந்நிகழ்வில் மத்திய சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்து லசேன, வடமாகாண பதில் சுகாதார பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி, யாழ்ப்பாண பிராந்திய சுகாதார பணிப்பாளர் மருத்துவர் ஆறுமுகம் கேதீஸ்வரன் , வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரன், கோப்பாய் பிரதேச மருத்துவமனையின் முன்னாள் பொறுப்பு அதிகாரி மருத்துவர் மகேந்திரன் , கோப்பாய் மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவர்சிவாகோனேசன், ஜப்பான் ஜெயிக்கா நிறுவன அதிகாரிகள், உலக வங்கியின் அதிகாரிகள் எனப் பலரும் கல ந்து கொண்டனர். (5-6-33-104)

# பூநகரியில் விபத்து மூவர் படுகாயம்



(கிளிநொச்சி)

பூநகரி முழங்காவில் நாச்சிக்குடா சந்தியில் இடம் பெற்ற விபத்தில் மூவர் படுகாயம் அடைந்த நிலையில் முழங்காவில் ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

நேற்று 12 மணியளவில் பூநகரியில் இருந்து மன்னார் நோக்கி பயணித்த முச்சக்கர வண்டி ஒன்று நாச்சிக்குடா சந்தியில் எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதுடன் ஹோட்டலுக்கு முன் நிறுத்தி வைக்க பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் மேதியுள்ளது. (5-6)

# கொக்குத்தொடுவாய் அகழ்வு நவம்பர் 20 ஆம் திகதி முன்னெடுப்பு

(நெளுக்குளம்)

நவம்பர் மாதம் 20 ஆம் திகதி மீண்டும் மனித புதைகுழி அகழ்வு பணி ஆரம்பிக்கப்படும் என சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன் தெரிவித்தார்.

மனித புதைகுழி தொடர்பான வழக்கு நேற்று முல்லை மாவட்ட நீதிமன்றத்தில் தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் எடுத்து கொள்ளப்பட்டிருந்தது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், நேற்று அகழ்வு பணி ஆரம்பிக்கப்பட இருந்த நிலையில் ராஜ் சோமதேவ சமுகமளிக்க முடியாததனால் கொக்குத்தொடுவாய் அகழ்வு பணியானது மீளவும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட இருப்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் மிகுதியாக உள்ள செலவுத்தொகை பணம் எவ்வளவு என்பது தொடர்பாக கதைக்கப்பட்டு அதற்கான கணக்கறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. (5-6-299-315)

# கட்டுமானப் பணிகளுக்கு தேவையான மணல் விநியோகத்தினை உறுதிப்படுத்த வேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் கட்டுமானப் பணிகளுக்கு தேவையான மணல், நியாயமான விலையிலும் தட்டுப்பாடின்றியும் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் மணல் அகழ்வு மற்றும் மணல் விநியோகம் தொடர்பான விசேட கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது. அதன்போது, வடமராட்சி கிழக்கு பகுதியில் அடையாளம் காணப்பட்ட மணல் திட்டுக்களில் மணல் அகழ்வினை மேற்கொள்வதில் காணப்படும் நடைமுறைச் சிக்கல்கள் ஆராயப்பட்டது. குறிப்பாக பெரும்பாலான மணல் திட்டுக்கள் வனவளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் ஆகிய திணைக்களங்களினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளமையினால் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் பிராந்திய அதிகாரிகள் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருந்ததுடன், நிறைவேற்று நிலை அதிகாரிகளும் சூம் காணொலி ஊடாக கலந்து கொண்டிருந்தனர். இந் நிலையில், சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவதற்கும் மணல் அகழ்வு அனுமதிகள் வழங்கப்பட்டு தட்டுப்பாடன்றி மணல் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என தெரிவித்தார். (5-6-33)



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நவ மகாஜன சிற்பி தெ.து.ஜயரத்தினம் நினைவுதினமும் பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. (படம்- சிவசாந்தன், கஜிந்தன்)

# 50 கிலோ கேரளாகஞ்சா மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வல்வெட்டித் துறையில் 50 கிலோ எடைக்கும் அதிகமான கேரளா கஞ்சா நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வல்வெட்டித்துறை ஊரிக்காடு கடற்கரைப் பகுதியில் மர்ம பொதியொன்று இருப்பதாக இராணுவ புனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய நடத் தப்பட்ட சோதனையின்போது கேரளாகஞ்சா மீட்கப்பட்டது.



சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படாத நிலையில் மீட்கப்பட்ட கஞ்சா வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் குறித்த பொதி எவ்வாறு வந்திருக்கும் என்பது தொடர்பில் பல்வேறு கோணங்களிலும் விசாரணை செய்து வருகின்றனர். (5-6-33-104)

# வவுனியா- ஏ9 வீதியில் விபத்துக்குள்ளான கார்

(வவுனியா)

வவுனியா - ஏ9 வீதியில் பயணித்த சொகுசு கார் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து சாந்தசோலை சந்திப் பகுதியில் உள்ள பாலத்திற்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

இந்நிலையில், சொகுசு காரில் பயணித்த இருவரும் மயிரிழையில் எந்தவித காயங்களுமின்றி உயிர்தப்பியுள்ளனர்.

நேற்றுக் காலை வவுனியாவில் இருந்து கனகராயன்குளம் நோக்கி சென்ற சொகுசு கார் ஏ9 வீதி சாந்தசோலை சந்தியை அடைந்த போது அதேவழியில் சென்ற கனரக வாகனம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது குறித்த சொகுசு கார், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பாலத்தின் தூண் ஒன்றை உடைத்துக் கொண்டு பாலத்திற்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.



இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், குறித்த சொகுசு காரை பாரம் தூக்கியின் துணையுடன் மீட்டெடுத்தனர். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மீது திணிக்கப்படும் வரி

(கொழும்பு)

நாளுக்கு நாள் மாதத்திற்கு மாதம் என மக்களிடம் வரி அறவிடப்படுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதனால் மக்களால் வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியாத நிலை தற்போது உருவாகி இருக்கின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டியது அத்தியாவசியம் என்றும் 2048 ஆம் ஆண்டில் டிஜிட்டல் பொருளாதாரம் உருவாக்கப்படும் என்று பேசுவதில் எந்த பிரயோசனமும் இல்லை.

அதேவேளை அடுத்த வேளை உணவுக்காக போராடும் மக்களிடம் 25 வருடங்களின் பின்னர் நடக்க போகும் விடயங்கள் குறித்து பேசுவதில் அர்த்தம் இருக்கின்றதா என்றும்



ஜீ.எல். பீரிஸ் கேள்வியெழுப்பியுள்ளார். (5-6)

# தேர்தல் நகர்வுகளை முன்னெடுக்க விசேட குழுவொன்று நியமனம்

(கொழும்பு)

தேர்தலுக்கான நகர்வுகளை முன்னெடுப்பதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விசேட குழுவொன்றை நியமித்துள்ளதாக சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில் பல்வேறு கட்சிகளும் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்காக தயாராகி வருகின்றனர்.

இவ்வாறானதொரு நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தேர்தலை முகங்கொடுக்க தயாராகின்றது.

தேசிய மட்டத்திலான தேர்தல்களில் சுதந்திரக் கட்சி எவ்வாறு செயற்பட வேண்டும். அதற்கு எவ்வாறு தயாராக வேண்டும் என்பன உள்ளிட்ட விடயங்களை இக்குழு தீர்மானிக்கும் எனவும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் அதனை எதிர்கொள்வதற்கு தயாராக வேண்டும். அதற்காகவே இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இன்னும் ஓரிரு நாட்களில் இக்குழு கூடவுள்ளது.

அதேவேளை எதிர்வரும் தேர்தலுக்கான தயார்படுத்தல்களை ஆரம்பித்துள்ளோம். (5-6)



# 10 வருடங்களின் பின்னர் ஆரம்பமான துருக்கி - இலங்கை விமான சேவை



(கொழும்பு)

துருக்கிய விமான சேவை பத்து வருடங்களின் பின்னர் இலங்கைக்கான நேரடி விமான சேவையை நேற்று திங்கட்கிழமை ஆரம்பித்துள்ளதாக இலங்கை விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இஸ்தான்புல்லுக்கும் கொழும்புக்கும் இடையில் வாரம் தோறும் 4 விமான சேவைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 5.41 மணிக்கு 261 பயணிகளுடன் முதலாவது நேரடி விமானம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியது.

முதலாவது நேரடி விமானம் நீர் வணக்கத்துடன் வரவேற்கப்பட்டது. இலங்கை தேயிலை சபையின் அனுசரணையுடன் உலகின் தலைசிறந்த தேயிலைக்கு இணையான சிலோன் தேநீர் பரிசுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்த நேரடி விமானச் செயற்பாடுகளின் ஆரம்பமானது எதிர்காலத்தில் இலங்கையின் சுற்றுலாத் துறையை பாரியளவில் மேம்படுத்தும் எனவும், துருக்கி விமான சேவைகளுடன் ஐரோப்பிய இடங்களை இணைக்க இந்த இணைப்பு முக்கியமானது எனவும் விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகளின் மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார். (5-6)

# பயணத்தடை விதிப்பு தொடர்பில் ஜனாதிபதி ரணிலுக்கு கடிதம்

## சரத் வீரசேகர


(கொழும்பு)

அமெரிக்கா, கனடா ,அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் முன்னாள் ஜனாதிபதிகள், ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் உட்பட இராணுவ அதிகாரிளிற்கு எதிராக விதித்துள்ள பயண தடைகள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர ஜனாதிபதிக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.

கடிதத்தில் முன்னாள் ஜனாதிபதிகள் மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபாய ராஜபக்ஷ பாதுகாப்பு படைகளின் பிரதானி சவேந்திர சில்வா உட்பட பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் என சரத்வீரசேகர தெரிவித்துள்ளார்.

இவர்கள் எவருக்கும் எதிராக உள்நாட்டு வெளிநாட்டு நீதிமன்றங்களில் யுத்த குற்றச்சாட்டுகள் எவையும் சுமத்தப்படவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளை தோற்கடிப்பதற்கான அரசியல் இராணுவ தலைமைத்துவத்தை வழங்கியவர்களை அவமானப்படுத்துவதற்காக மேற்குலகம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பிரேரணைகளை பயன்படுத்துகின்றது.



இலங்கையின் தொடர்ந்து வந்த ஆட்சியாளர்கள் ஜெனிவா சாசனம் மற்றும் யுத்தம் குறித்து மனித உரிமை பேரவை தெளிவுபடுத்த தவறிவிட்டனர் .

சில அதிகாரிகள் அமைதிப்படை நடவடிக்கைகளில் கலந்துகொள்வதற்கான அனுமதி வழங்கப்படவில்லை, ஆதாரமற்ற யுத்தகுற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவர்களின் நியமனங்கள் தாமதிக்கப்பட்டன அல்லது நிராகரிக்பபட்டன எனவும் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார். (5-6)

# நெல் காணாமல்போன சம்பவம் தொடர்பில் 2 அதிகாரிகள் பணிநீக்கம்

(கொழும்பு)

நெல் களஞ்சியசாலைகளில் இருந்து பெருந்தொகையான நெல் மூடைகள் காணாமல் போன சம்பவம் தொடர்பில் இரண்டு அதிகாரிகள் பணியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குருணாகல் பகுதியில் உள்ள அரசின் இரண்டு நெல் களஞ்சியசாலையிலிருந்து ஒரு தொகை நெல்காணாமல்போயுள்ளதாக அவர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

காணாமல் போயுள்ள நெல் தொகையின் பெறுமதி 650 முதல் 700 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (5-6)


# 2024 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல் வடமாகாண சபை

வடமாகாண சபைக்குட்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் மாவட்டங்களுக்கு 2024 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு **உள்ளூர் வழங்குநர்களாக** பதிவு செய்ய விரும்பும் **யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு உட்பட்ட தரம் வாய்ந்த வழங்குநர்களிடமிருந்தும் உற்பத்தியாளர்களிடமிருந்தும்** விண்ணபங்கள் கோரப்படுகின்றன. **2023 நவம்பர் மாதம் 30 ஆம்** திகதிக்குப் பின்பு கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விபரங்களை வடமாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.np.gov.lk இல் தரவிறக்கம் செய்து அல்லது யாழ்ப்பாணத்தில் **மாகாண சபை வளாகம், A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் இயங்குகின்ற **மாகாணத் திறைசேரி** அலுவலகத்திலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ள **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைகளிலுள்ள நிதிக்கிளைகளிலும்** பெற்றுக்கொள்ள முடியும்.

**பிரதம செயலாளர்,**
**வடமாகாண சபை,**
**மாகாண சபை வளாகம்,**
**A9 வீதி, கைதடி,**
**யாழ்ப்பாணம்.**

(C-7525)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## தீவிரமடையும் போர் சுமார் 9000 பேர் பலி



(காசா)

ஹமாஸ் - இஸ்ரேல் இடையிலான போரில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்தை தாண்டி உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய பாலஸ்தீனத்தின்-காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் இதுவரை 7, 703 பேரும் ஹமாஸ்-இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலில் இதுவரை 1,403 பேரும் பாலஸ்தீனத்தின் மேற்கு கரைப் பகுதியில் நடந்த மோதலில் மேலும் 109 பேரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் இஸ்ரேல்-ஹமாஸ் படையினர் இடையிலான போரில் இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9,217 ஆக உயர்ந்துள்ளது.

ஆயிரக்கணக்கான உயிர்களை காவு வாங்கிக் கொண்டிருக்கும் இஸ்ரேல்-ஹமாஸ் படைகளுக்கு இடையிலான போர் 24 ஆவது நாளாக தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## பணயக் கைதிகளை விடுவிக்க

## இஸ்ரேலுக்கு நிபந்தனை விதிப்பு

**(காசா)**

**தங்களிடம் உள்ள பணயக்கைதிகளை விடுவிக்க வேண்டுமெனில் இஸ்ரேல் சிறையில் வாடும் பாலஸ்தீன கைதிகளை விடுவிக்க வேண்டும் என ஹமாஸ் அமைப்பு நிபந்தனை விதித்துள்ளது.**



இஸ்ரேல் -ஹமாஸ் இடையிலான போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்தப் போர் நடவடிக்கையில் ஹமாஸ் அமைப்பினரை ஒட்டுமொத்தமாக அழிக்கும் நோக்கிலும் ஹமாஸ் படையினர் கட்டுப்பாட்டில் இருக்கும் பணயக் கைதிகளை விடுவிக்கும் நோக்கிலும் இஸ்ரேலிய இராணுவப்படை காசாவில் தரைவழி. தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

## காசாவில் உணவுப் பற்றாக்குறை உலக உணவுத்திட்டம் தகவல்

(காசா)

காசா பகுதிக்கான உணவுப் பொருட்கள் போதுமானதாக இல்லை என உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது. இவ்விடயம் தொடர்பில் உலக உணவுத் திட்டம் மேலும் குறிப்பிடுகையில்,

"காசா பகுதியில் உள்ள ஒரு மில்லியன் மக்களுக்கு உணவு மற்றும் தண்ணீர் வழங்க சுமார் 40 கொள்கலன்களில் உதவி தேவையாக உள்ளது. மேலும்,



காசாவில் உள்ள 2 மில்லியன் மக்களுக்கு உணவை வழங்குவதற்கு நாளொன்றுக்கு சுமார் 100 கொள்கலன்கள் அவசியமாகும்." என சுட்டிக்காட்டியுள்ளது. (5-6)

## இஸ்ரேலின் ஆளில்லா விமானத்தை வீழ்த்திய ஹெஸ்புல்லா அமைப்பு

(ஜெருசலேம்)

இஸ்ரேலின் ஆளில்லா விமானமொன்றை சுட்டு வீழ்த்தியுள்ளதாக ஹெஸ்புல்லா அமைப்பு தெரிவித்துள்ளது.

சமீபத்தைய மோதல்களில் முதல்தடவையாக ஹெஸ்புல்லா அமைப்பு. இஸ்ரேலின் ஆளில்லா விமானத்தை சுட்டுவீழ்த்தியுள்ளதாக உரிமை கோரியுள்ளது.

தென்லெபனானின் கியாமில் இஸ்ரேலின் ஆளில்லா விமானத்தை சுட்டுவீழ்த்திய தாகவும் அத்தோடு சுட்டு வீழ்த்தப்பட்ட ஆளில்லா விமானம் இஸ்ரேலிற்குள் விழுந்தது எனவும் ஹெஸ்புல்லா அமைப்பு தெரிவித்துள்ளது.

அதேவேளை ஏழாம் திகதிக்கு பின்னர் இஸ்ரேலுடனான மோதல்களில் தனது அமைப்பை சேர்ந்த 46 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் ஹெஸ்புல்லா அமைப்பு தெரிவித்துள்ளது. (5-6)

## உயி...
## உரி...

(காசா)

இஸ்ரேல் ...
லில் அன்பு...
தங்களிடமிரு...
அவர்களிற்கு...
செய்வதற்கான...
பறிப்பதாக ப...
கவலை தெரி...
துயரங்க...
உயிரிழந்தவர்...
தையும் பறி...
சிறிய ஆறுத...
வையாக இ...
தைகளே கா...

## இஸ்ரேலியர்களை தேடிவந்த கும்பலால் ரஷ்ய விமான நிலையத்தில் பரபரப்பு

(மொஸ்கோ)

ரஷ்யாவின் தாகெஸ்தான் பிரதான விமான நிலையத்தில் திடீரென இஸ்ரேலியர்களைத் தேடி ஒரு கும்பல் புகுந்ததால் விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டதாகவும் சில விமானங்கள் ரத்து செய்யப்பட்டதோடு மற்றும் விமான நிலையத்திற்கு வந்து கொண்டிருந்த விமானங்கள் திருப்பி விடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் இருந்து விமானம் வந்து இறங்கியிருப்பதாக வந்த தகவலையடுத்து அந்தக் கும்பல் இஸ்ரேல் பயணிகளைத் தேடியதாகவும் அவர்கள்



பயணிகளின் பாஸ்போர்ட்டுகளை சோதித்ததாகவும் கூறப்படுகிறது.

பாதுகாப்பு தடையை மீறி உள்ளே நுழைந்த அந்த கும்பல் விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த கார்களை கைப்பற்றியதோடு ரன்வேயில் விமானங்களை வழிமறித்தும் விமானத்தின் இறக்கைகளில் ஏறியும் அந்தக் கும்பல் செய்த அட்டகாசங்களின் வீடியோ பதிவுகள் வெளியாகியுள்ளன.

பின்னர் பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டு அவர்கள் விமானநிலையத்தை தங்கள் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவந்தனர்.(5-6)

## பிரேசிலில் விமா...
## 12 பேர் உயி...

(பிரேசிலியா)

பிரேசிலின் ரியோ பிரான்சிகோ விமான நிலையத்தின் அருகே நேற்று முன்தினம் சிறிய ரக விமானமொன்று கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் அதில். பயணித்த 12 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இவ்விபத்துக்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. இந்நிலையில் இது தொடர்பான விரிவான விசாரணைகள் இடம் பெற்றுவருவதாக அதிகாரிகள்



தெரிவி...
இதே...
சிலோ...
தரையி...
விபத்து...
ரிழந்த...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...விக்கத் தயாராகும் ஹமாஸ்

...பிப்பு

...விக்க
...தீன
...மைப்பு

...மாஸ் இடை
...தொடர்ந்து
...கிறது.
...ர் நடவடிக்
...ஸ் அமை
...மொத்தமாக
...நோக்கிலும்
...பினர் கட்டு
...ம் பணயக்
...விடுவிக்கும்
...இஸ்ரேலிய
... காசாவில்
...ததலில் ஈடு
...ர்.



இஸ்ரேலிய இராணுவ படையின் இந்த ஆக்ரோஷமான தாக்குதலில் பாலஸ்தீன மக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டு வருகின்றனர்.

இதற்கிடையில் இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினரின் தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ஐ.நா மற்றும் உலக நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால் ஹமாஸ் அமைப்பை முழுவதும் ஒழிக்கும் வரை இந்த போர் தாக்குதலை நிறுத்த மாட்டோம் என இஸ்ரேல் அறிவித்துள்ளது. (5-6)

### பங்களாதேஷ்

## அரசிற்கு எதிரான போராட்டம் எதிர்க்கட்சி தலைவர் கைது

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகரில் அரசாங்கத்திற்கு எதிரான வன்முறைப் போராட்டங்களை அடுத்து அந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் மிர்சா ஃபக்ருல் இஸ்லாம் ஆலம்கிர் மற்றும் அவரது 540 இற்கும் மேற்பட்ட கட்சி உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்

பிரதமர் ஷேக் ஹசீனாவின் ராஜினாமாவுக்கு அழைப்பு விடுத்து பல்லாயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் வார இறுதியில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஏற்பட்ட வன்முறையை அடுத்து ஒரு பொலிஸ் அதிகாரியும் ஒரு போராட்டக்காரரும் உயிரிழந்ததாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் பங்களாதேஷின் தலைமை நீதிபதியின் வீட்டில் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும், குற்றத்திற்காக எதிர்க்கட்சித் தலைவர் கைது செய்யப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (5-6)



## உயிரிழந்தவர்களுக்கு இறுதிமரியாதை செலுத்தும் உரிமையையும் இழந்துள்ள காசா மக்கள்

(காசா)

இஸ்ரேல் -ஹமாஸ் மோதலில் அன்புக்குரியவர்களை தங்களிடமிருந்து பறிப்பதுடன் அவர்களிற்கு இறுதிமரியாதை செய்வதற்கான வாய்ப்புகளையும் பறிப்பதாக பாலஸ்தீனியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

துயரங்களின் மத்தியில் உயிரிழந்தவர்களிற்கு கௌரவத்தையும் பறிகொடுத்தவர்களிற்கு சிறிய ஆறுதலையும் கொடுப்பவையாக இந்த இறுதிமரியாதைகளே காணப்பட்டன.



மருத்துவமனைகளும் பிரேத அறைகளும் நிரம்பிவழிவதன் காரணமாகவும் இடைவிடாத தொடர்ச்சியான விமானக் குண்டு வீச்சு காரணமாகவும் இறுதி நிகழ்வுகளும் நினைவுகூருவதும் சாத்தியமற்ற விடயங்களாக மாறியுள்ளன.

புதியவர்களை புதைப்பதற்காக ஏற்கனவே காணப்படும் புதைகுழிகளை தோண்டி அக்லமாக்கவேண்டிய நிலையில் குடும்பங்கள் காணப்படுகின்றன.

மருத்துவமனைகளில் இடமின்மை காரணமாக மருத்துவமனை பணியாளர்கள் உடல்களை புதைத்த பின்னரே உறவினர்களிற்கு தெரிவிக்கின்றனர்.

இஸ்ரேலின் தாக்குதலில் குடும்ப உறுப்பினர்கள் எவராவது கொல்லப்பட்டால் அவர்களை அடையாளம் காண்பதற்காக குடும்ப உறுப்பினர்களின் கரங்களில் பிரஸ்லட் அணிவிக்கும் நடைமுறை கடந்த சில நாட்களாக காசாவில் உள்ளவர்கள் மத்தியில் காணப்படுகின்றது.

குழந்தைகள், சிறுவர்களின் கைகால்களில் மார்க்கர்களால் அவர்களின் பெயர்களை எழுதுகின்றனர். (5-6)

## ...விமான விபத்து ... உயிரிழப்பு



...னம்
...லை.
...ான
...டம்
...கள்

தெரிவித்துள்ளனர்.

இதேபோல், கடந்த மாதம் பார்சிலோஸ் நகரில் புயலின் போது தரையிறங்க முயன்ற விமானம் விபத்துக்குள்ளானதில் 14 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## 2 ரயில்கள் நேருக்குநேர் மோதி விபத்து 19 பேர் உயிரிழப்பு,50 பேர் காயம்

(டில்லி)

ஆந்திர மாநிலம் விஜயநகரம் மாவட்டத்திலுள்ள 2 ரயில்கள் ஒன்றோடு ஒன்று மோதி கோர விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த விபத்தில் இது வரை 19 பேர் உயிரிழந்துள்ளனர். 50 பேர் காயமடைந்து இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

குண்டூரில் இருந்து புறப்பட்டு ராயகடா நோக்கி சென்று கொண்டு இருந்த விரைவு ரயில் மீது விசாகப்பட்டினத்தில் இருந்து பலாசா நோக்கி சென்ற பயணிகள் ரயில் மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.



இதில், ரயில்களின் பெட்டிகள் மற்றும் தண்டவாளங்கள் உருக்குலைந்துள்ளன.

மேலும் 19 பேர் வரை உயிரிழந்து இருப்பதாகவும் பலர் படுகாயமடைந்து இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

சிக்னல் கோளாறு காரணமாக விபத்து ஏற்பட்டு இருக்கலாம் என கூறப்படுகிறது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதான இந்திய மீனவர்களை விடுவிக்கக்கோரி ஸ்டாலின் கடிதம்


(சென்னை)

இலங்கை கடற்படையினால் கைது செய்யப்பட்ட அனைத்து 'கடற்றொழிலாளர்களையும் விடுவிக்க இராஜ தந்திர ரீதியிலான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்தியாவின் மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த 37 கடற்றொழிலாளர்களை கடற்படையினர் கைது செய்ததுடன் அவர்களின் 5 படகுகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்த மாதத்தில் மாத்திரம் 64 தமிழக கடற்றொழிலாளர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டதுடன், 10 மீன்பிடிப் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.



தமிழக கடற்றொழிலாளர்களின் உரிமைகளுக்காக மத்திய அரசாங்கம் வலுவாகக் குரல் கொடுக்க வேண்டுமென தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்ததோடு கடற்றொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு, மத்திய அரசாங்கம் இராஜ தந்திர ரீதியில் இலங்கையுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (5-6)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 320 |
| உருளைக்கிழங்கு | 250 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 320 | 300 | 320 | 400 |
| தக்காளி | 200 | 200 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 100 | 150 | 150 |
| கோவா | 200 | 200 | 240 | 250 |
| கரட் | 350 | 350 | 350 | 400 |
| பூசணி | 80 | 80 | 100 | 80 |
| புடோல் | 200 | 200 | 150 | 250 |
| வாழைக்காய் | 200 | 180 | 140 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 450 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 300 | 300 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 400 |
| வெண்டக்காய் | 250 | 180 | 160 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 400 | 350 | 200 | 400 |
| லீக்ஸ் | 200 | 250 | 240 | 300 |
| பீற்றூட் | 140 | 140 | 150 | 200 |
| கறிமிளகாய் | 350 | 350 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 350 | 400 |
| போஞ்சி | 500 | 500 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 240 | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1400 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 500 | 500 | 500 |
| வெங்காயப்பூ | — | 350 | 400 | 450 |
| முள்ளங்கி | 100 | 140 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 150 | 120 | 200 |

# தேசிய பாற்பண்ணைப் பசுக்கள் இறைச்சிக்காக விற்கப்படுகிறது

## பண்ணைத் தொழிலாளர்கள்

(கொழும்பு)

அக்கரபத்தனை டயகம பகுதியில் உள்ள தேசிய பாற்பண்ணையில் 450 கறவை பசுக்கள் பண்ணையில் இருந்து இறைச்சிக்காக விற்பனை செய்யப்பட்டுள்ளதாக பண்ணையில் பணிபுரியும் தொழிலாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு தேசிய மிருக வளர்ப்பு அரச நிறுவனம் மூலம் நாட்டின் பால் உற்பத்தியை பெருக்கும் வகையில் அவுஸ்திரேலியாவில் இருந்து பெரும் தொகையான நிதி செலவு செய்து இந்த பண்ணைக்கு கொண்டு வரப்பட்டது.

அவ்வாறு கொண்டு வரப்பட்ட கறவை பசுக்கள் தற்போது பண்ணையில் இல்லை என அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பண்ணையில் பணி புரியும் உயர் அதிகாரியினால் இவ்வாறான கறவை பசுக்கள் இறைச்சிக்காக நுவரெலியா, கம்பளை, நாவலப்பிட்டி, ஹற்றன், அக்கரபத்தனை, பகுதியில் உள்ள இறைச்சி விற்பனை நிலையங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது எனவும் அவ்வாறான பசுக்கள் பண்ணையில் இருந்து பார ஊர்தி மூலம் கொண்டு செல்லப்படுகிறது எனவும் அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (5-6)




கௌதமன்




மது




சாம்பவி




மாயா




ரவீனா




மணி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/yalampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
# 2024 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள்.இறைச்சிக்கடைகள். என்பவற்றை 01.01.2024 ஆம் திகதி தொடக்கம் 31.12.2024ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் | : 01.11.2023 - 21.11.2023ஆம் திகதி பி.ப 3.00 மணி வரை |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி | : 22.11.2023ஆம் திகதி மு.ப 10.00 மணி வரை |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி | : 22.11.2023ஆம் திகதி மு.ப 11.00மணிக்கு |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் | : கலந்துரையாடல் மண்டபம். தலைமை அலுவலகம். நல்லூர் பிரதேச சபை |

1. கேள்விப்பத்திரங்கள் இரண்டு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளையும் செயலாளர், நல்லூர் பிரதேச சபை. 14/5.கருவப்புலம் வீதி. கொக்குவில் கிழக்கு. கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு, தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
2. அட்டவணையில் உள்ளவாறு மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் மற்றும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் என்பவற்றை செலுத்தி கேள்விப் பத்திரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்களை பெறுபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையையும் கிராம அலுவரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. கேள்விப் படிவக்கட்டணம், கேள்வித் தொகை. மாத வாடகை என்பவற்றுக்கு காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்பட வேண்டும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
5. மரக்கறிச் சந்தைக்கான கேள்வியில் சித்தியடையும் கேள்விக்காரர் உள்ளூராட்சி ஆணையாளரின் 03/2015 இலக்கமும் 09.11.2015 திகதியும் உடைய சுற்றுநிருபத்திற்கு அமைவாக இணங்குதல் வேண்டும்.
6. மரக்கறிச் சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டுவரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக்கூடாது. என்பதுடன், விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய சந்தைக்கு வரும் உற்பத்தியாளர்களிடமிருந்து தரகுப் பணம் எதுவும் அறவிடப்படலாகாது.
7. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொக்குவில் கொல்களத்தில் வெட்டப் படுதல் வேண்டும். இறைச்சிக்காக மறி ஆடுகள், பசு மற்றும் கன்றுகள் அறுக்கப்படுவது அனுமதிக்கப்படமாட்டாது. இறைச்சிக்காக கொள்வனவு செய்யப்படும் கால்நடைகளுக்கு அப்பகுதி கால்நடை வைத்திய அதிகாரியின் நோய்த்தொற்று இல்லை என்ற சுகாதாரச் சான்றிதழ் பெறப்பட்டிருக்க வேண்டும். மேலும் சுகாதார வைத்திய அதிகாரியினால் கால்நடைகளுக்கான நோய்த்தாக்கம் தொடர்பாக பிரகடனப்படுத்தப்படும் பொழுது கொல்கள செயற்பாடுகள் நிறுத்தப்படும். அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்
8. இறைச்சிக் கடைகளுக்கான கேள்வியில் சித்திபெறும் கேள்விதாரர் சுகாதார வைத்திய அதிகாரியால் அறிவிக்கப்படும் சுகாதார மேம்பாட்டு விடயங்களைக் கருத்திற்கொள்ளத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தத்தினை இரத்துச் செய்வதற்கு சபைக்கு அதிகாரம் உண்டு.
9. அரசாங்கத்தினால் மாடு இறைச்சிக்காக வெட்டுவது தடை செய்யப்படும் பட்சத்தில் சபையினால் கேள்விதாரருடன் செய்யப்பட்ட குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்படும்.
10. திருநெல்வேலிச் சந்தையில் விசேட பண்டிகை நாட்களில் நடைபாதை மற்றும் வீதியோர வியாபார நடவடிக்கைகள் அனுமதிக்கப்பட மாட்டாது என்பதுடன். சபையினால் ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வரி அறவிட அனுமதிக்கப்படும்.
11. எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
12. ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் சபை நிதிக்கு மாற்றப்பட்டு கேள்விகாரரின் பெயர் "தவறுனர்" பட்டியலில் சேர்க்கப்படும்.
13. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
14. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 2023.11.30ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
15. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**2024 ஆம் ஆண்டுக்கு சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | சந்தைகள் (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக்கடைகள் | மீளளிக்காத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2024 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| நல்லூர் உப அலுவலகம் | | | | |
| 1 | திருநெல்வேலிச்சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நீங்கலாக) | 1,000.00 | 35,000.00 | 34,490,290.00 |
| 2 | திருநெல்வேலிச்சந்தை துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 10,000.00 | 1,000,000.00 |
| 3 | திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 5,000.00 | 922,170.00 |
| 4 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 01. | 1,000.00 | 5,000.00 | 127,610.00 |
| 5 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 02. | 1,000.00 | 5,000.00 | 161,350.00 |
| கொக்குவில் உப அலுவலகம் | | | | |
| 1 | கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 10,000.00 | 1,856,250.00 |
| 2 | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 5,000.00 | 908,160.00 |
| 3 | கொக்குவில் சந்தை கோழியிறைச்சிக் கடை | 1,000.00 | 5,000.00 | 676,500.00 |
| 4 | கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 5,000.00 | 903,230.00 |
| 5 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 01 | 1,000.00 | 5,000.00 | 156,420.00 |
| 6 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 02 | 1,000.00 | 5,000.00 | 159,500.00 |
| 7 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 5,000.00 | 1,875,100.00 |
| 8 | கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 975,260.00 |

செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.

(C-7526) 31.10.2023

## அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிப்பு




(கொழும்பு)

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில், நேற்றையதினம் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை மற்றும் கொள் முதல் பெறுமதி சற்று அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று வீத அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கமைய, நேற்றைய தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி, 321 ரூபாய் 70 சதமாக பதிவாகியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 321 ரூபாய் 54 சதமாக காணப்பட்டது.

அத்துடன், அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை பெறுமதி 332 ரூபாய் 49 சதமாக பதிவாகியுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை, அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை பெறுமதி 332 ரூபாய் 1 சதமாக காணப்பட்டது. (5-6)

## லொறி கவிழ்ந்து விபத்து-12 பேர் காயம்

(கொழும்பு)

தெல்தெனிய மொரகஹமுல - கல்மல் ஓயா வளைவுக்கு அருகில் லொறி ஒன்று கவிழ்ந்ததில் விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் பௌத்த பிக்கு உட்பட 12 பேர் காயமடைந்துள்ளதாக தெல் தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் தெல்தெனிய மற்றும் உடுதும்பர வைத்தியசாலை களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹசலக கொலங்கொட கங்காராம விகாரைக்குச் சென்று கொண்டிருந்த போது விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (5-6)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் பயிற்சியாளர்(Demonstrator-Contract Basic-Information Technology & Mechanical Engineering) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் தங்களால் சுய மாக தயாரிக்கப்பட்ட சுயவிபரக்கோவை யினை எதிர்வரும் 13.11.2023 இற்குள் பணிப்பாளர்,உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம், இல.665/2, கடற்கரைவீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தாலில் அனுப்பி வைக்குமாறும் மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள நிறுவனத்தினை தொடர்பு கொள்ளு மாறும் நிறுவனத்தின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (5-6)

## ரயிலில் மோதுண்டு யானை உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி வந்து கொண்டிருந்த தபால் ரயிலுடன் இரண்டு யானைகள் மோதிய தில் ஒரு யானை உயிரிழந்துள்ளது.

கிதுல்உதுவ 154 ஆம் கட்டைப் பகுதியில் யானை மின்வேலிகள் சிறந்த முறையில் இல்லாமையினால் யானை கள் அதிகளவில் விபத்துக்குள்ளாகி வருவதாகவும் வழமையாக குறித்த பகுதியில் ரயிலுடன் மோதி யானைகள் உயிரிழப்பதாகவும் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தெரிந்தி ருந்தும் குறித்த விடயத்தில் எது வித கவனமும் செலுத்துவது இல்லை என பொதுமக்கள் தெரிவித்தனர். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 323





சந்தேகமில்லை! அவர்கள்தான்! பழுவூர் இளையராணியைப் பார்த்துவிட்டா சக்கரவர்த்தி அப்படியெல்லாம் பேசுகிறார்? "உன்னைக் கொன்றது உண்மைதான்" என்று, அலறினாரே, அதன் பொருள் என்ன?

திடீரென்று வானதிக்கு மயக்கம் வரும் போலிருந்தது, தலை சுற்றத் தொடங்கியது. இல்லை, அந்த அரண்மனையே சுற்றத் தொடங்கியது. சீச்சீ! இங்கே மயக்கமடைந்து விடக்கூடாது. கூடவே கூடாது.

பல்லைக் கடித்துக் கொண்டு வானதி அங்கிருந்து சென்றாள். ஆனால் திரும்பச் செல்லும் பாதை தொலையாத பாதையாயிருந்தது. அவள் படுத்திருந்த அறை வரவே வராதுபோல் தோன்றியது. முடியாது இனி மேல் நடக்கமுடியாது நிற்கவும் முடியாது.

குந்தவைப் பிராட்டி கோயிலிருந்து திரும்பி வந்த போது வானதி அவள் அறைக்குச் சற்றுத் தூரத்தில் நடை பாதையில் உணர்வற்றுக் கட்டை போல் கிடப்பதைக் கண்டாள்.

### பதினாறாம் அத்தியாயம்
### சுந்தர சோழரின் பிரமை

மறுநாள் காலையில் சுந்தர சோழ சக்கரவர்த்தி தம் அருகாமைக் குமரியை அழைத்துவரச் செய்தார். ஏவலாளர் தாதிமார், வைத்தியர் அனைவரையும் தூரமாகப் போயிருக்கும் படி கட்டளையிட்டார். குந்தவையைத் தம் அருகில் உட்கார்ர வைத்துக்கொண்ட அன்புடன் முதுகைத் தடவிக் கொடுத்தார். அவர் சொல்ல விரும்பியதைச் சொல்ல முடியாமல் தத்தளிக்கிறார் என்பதைக் குந்தவை தெரிந்து கொண்டாளர்.

"அப்பா! என்பேரில் கோபமா?" என்று கேட்டாள்.

சுந்தர சோழரின் கண்களில் கண்ணீர் துளித்தது.

"உன்பேரில் எதற்கு அம்மா கோபம்?" என்றார்.

"தங்கள் கட்டளையை மீறித் தஞ்சாவூருக்கு வந்ததற்காகத் தான்!"

"ஆமாம் என் கட்டளையை மீறி நீ வந்திருக்க கூடாது. இந்தத் தஞ்சாவூர் அரண்மனை இளம் பெண்கள் வசிப்பதற்கு ஏற்றதல்ல. இது நேற்று இராத்திரி நடந்த சம்பவத்திலிருந்து உனக்கே தெரிந்திருக்கும்."

"எந்தச் சம்பவத்தைப் பற்றிச் சொல்கிறீர்கள். அப்பா?"

அந்தக் கொடும்பாளூர்ப் பெண் மூர்சையடைந்ததைப் பற்றித்தான் சொல்லுகிறேன் அந்தப் பெண்ணுக்கு இப்போது உடம்பு எப்படியிருக்கிறது?"

அவருக்கு இன்றைக்கு ஒன்றுமேயில்லை, அப்பா! பழையாறையிலும் அடிக்கடி இவள் இப்படிப் பிரக்ஞை இழப்பது உண்டு கொஞ்ச நேரத்துக்கெல்லாம் சரியாகப் போய்விடும்."

"அவளைக் கேட்டாயா, அம்மா? இராத்திரி இந்த அரண்மனையில் அவள் ஏதேனும் கண்டதாகவோ, கேட்டதாகவோ சொல்லவில்லையா?"

குந்தவை சற்று யோசித்துவிட்டு, "ஆம் அப்பா! நாங்கள் எல்லோரும் துர்க்கை ஆலயத்துக்குச் சென்றிருந்தபோது, அவள் தனியாக மேல்மாடத்துக்குப் போகப் பார்த்தாளம். அப்போது யாரோ பரிதாபமாகப் புலம்புவது போலக் கேட்டதாம். அது அவளுக்குப் பயத்தை உண்டாக்கியதாகச் சொன்னாள்" என்றாள்.

"அப்படித்தான் நானும் நினைத்தேன். இப்போதேனும் அறிந்தாயா, குழந்தாய்? இந்த அரண்மனையில் பேய் உலாவுகிறது. நீங்கள் இங்கே இருக்க வேண்டாம். போய் விடுங்கள்!" என்று சுந்தர சோழர் கூறியதுபோது அவர் உடல் நடுங்குவதையும், அவருடைய கண்கள் வெறித்தபடி எங்கேகோ பார்ப்பததையும் குந்தவை கவனித்தாள்.

"அப்பா! அப்படியானால் தாங்கள்மட்டும் இங்கே எதற்காக இருக்க வேண்டும்? அம்மா இங்கே எதற்காக இருக்க வேண்டும்? எல்லோரும் பழையாறைக்கே போய்விடலாமே! இங்கே வந்ததினால் உங்கள் உடம்பு குணமாயிருப்பதாகவும் தெரியவில்லையே" என்றாள்.

சக்கரவத்தி துயரம் தோய்ந்த புன்னகை புரிந்து, "என் உடம்பு இனிமேல் குணமாவது ஏது? அந்த ஆசை எனக்குக் கொஞ்சமும் கிடையாது" என்றார்.

(தொடரும்...)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு
## யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

### சொற் புதிர்கள்

| | |
|---|---|
| சிற்றன்னை இருக்கும் மாதம் எது? | சித்திரை |
| புண்ணிய தலம் இருக்கும் மாதம் எது? | வைகாசி |
| உணவு தேவைப்படும் மாதம் எது? | ஐப்பசி |
| கையுள்ள மாதம் எது? | கார்த்திகை |
| நமக்கு இருக்க வேண்டிய கை எது? | நம்பிக்கை |
| பிடுங்க வேண்டி பல் எது? | சோம்பல் |
| பெருக்க வேண்டிய வாய் எது? | வருவாய் |
| மிதக்கும் பல் எது? | கப்பல் |
| விலையுயர்ந்த வாத்தியம் எது? | மிருதங்கம் |
| கல்லுள்ள ஊர் எது? | அம்பாறை |
| பறவையுள்ள ஊர் எது? | கிளிநொச்சி |
| தர்மம் புரியும் ஊர் எது? | பாலாங்கொடை |
| அம்பு விடும் ஊர் எது? | பொத்துவில் |
| பொதுதான நாடு எது? | மாலைதீவு |
| பாசம் உள்ள நாடு எது? | தாய்லாந்து |
| சேனை காணப்படும் ஊர் எது? | வாழைச்சேனை |
| நெல்லி இருக்கும் ஊர் | நெல்லியடி |
| வாழை உள்ள சேனை | வாழைச்சேனை |
| கோவில் உள்ள ஊர்? | நாகர்கோவில் |
| யாழ் உள்ள ஊர் எது? | யாழ்ப்பாணம் |
| பிட்டி உள்ள ஊர்? | நாவலப்பிட்டி |
| இரத்தினம் உள்ள ஊர் | இரத்தினபுரி |
| புளி உள்ள குளம் எது? | புளியங்குளம் |
| மா உள்ள குளம் எது? | மாங்குளம் |

ஆ.கார்த்திகா

## திருக்குறள் பாட்டு

ஒன்றே முக்கால் அடியாலே
உலகைக் கவர்ந்த திருக்குறள்
நன்றே செய்ய மனிதர்களை
நாளும் தூண்டும் திருக்குள்

ஒன்றே குலமெனும் திருக்குறள்
உயர்வைப் பேசும் திருக்குறள்
என்றும் வாழும் திருக்குறள்
எவர்க்கும் பொதுவாம் திருக்குறள்

முப்பால் என்ற பெயர் கொண்டு
முழுமையை நல்கும் திருக்குறள்
எப்பொழுதும் நாம் படித்திட
ஏற்ற நூலாம் திருக்குறள்

வள்ளுவர் தந்த திருக்குறள்
வாழ்வைப் புதுக்கம் திருக்குறள்
உள்ளம் கவரும் ஒரு நூலாம்
உலகம் போற்றும் பெருநூலாம்

ம.கவிப்பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன உறுதியும் அன்பும் நம்மிடமுள்ள பெரிய கவலைச் சுமையைப் போக்கக்கூடிய ஆற்றல் பெற்றவை.

– எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இன்னும் எத்தனை குழந்தைகள் பலியாக வேண்டும்

உலகம் தனது மௌனத்தைக் கலைக்க இன்னமும் எத்தனை குழந்தைகள் பலியாக வேண்டும். இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஸ்கொட்லாந்தின் பிரதமர் ஹம்ஸா யூசுப்.

காசா மீது இஸ்ரேல் நடத்துகின்ற மிக மோசமான போரில் நாள்தோறும் ஆயிரக் கணக்கான குழந்தைகள் கொல்லப்படுகின்றனர்.

எனினும் அந்தக் குழந்தைகள் கொல்லப் படுவது குறித்து உலக நாடுகள் தொடர்ந்தும் மௌனமாகவே இருக்கின்றன.

இந்தநிலையில் தான் உலக நாடுகள் தமது மௌனத்தை கலைக்க இன்னும் எத்தனை குழந்தைகள் பலியாக வேண்டும் என்ற கேள்வியை ஸ்கொட்லாந்தின் பிரதமர் முன்வைத்துள்ளார்.

ஆம், வார்த்தைகள் மிகவும் வலிமையானவை. இந்த உலகத்தில் நீதி நிலைநாட்டப்படுவதற்குக் காரணமாக அமைந்தவையும் வார்த்தைகளே.

கிருஷ்ண பரமாத்மா குருசேத்திரத்தில் வைத்து அருச்சுனனுக்கு கீதோபதேசம் செய்கிறார்.

அந்த வார்த்தைகள் போர் நடத்துவதற்கானதென்று யாரும் நினைத்துவிடலாகாது. மாறாக தர்மத்தை நிலைநாட்டுவதற்கானதென்பது புரியப்பட வேண்டும்.

இதேபோன்றுதான் ஒவ்வோர் இடத்திலும் கருத்துரைப்புகள் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

அந்த மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய வலிமைமிக்க வார்த்தையாக ஸ்கொட்லாந்தின் பிரதமர் யூசுப் அவர்கள் முன்வைத்த கருத்தைப் பார்க்க முடியும்.

ஆம், காசாவை இஸ்ரேல் கொலைக்களமாக ஆக்கியுள்ளது. மக்களின் வாழ்விடத்தை முற்றாக அழிப்பதென்பதற்குள் அங்கு வாழ்கின்ற ஒட்டுமொத்த மக்களையும் கொல்லும் சதித்திட்டம் உண்டென்பது அனைத்து நாடுகளும் உணர்ந்த உண்மை.

அதிலும் அப்பாவிக் குழந்தைகள் கொல்லப்படுகின்றனர். காட்டில் வாழுகின்ற கொடிய விலங்குகள் கூட, தம் பசிக்கு இரையாகும் மிருகங்களின் குட்டிகளைக் கொல்வதில்லையாம்.

ஆனால் இங்கோ மனிதர்கள் குழந்தைகளைக் கொல்லுகின்ற கொடுமையைச் செய்கின்றனர்.

இதுதான் கொடுமை என்றால், அந்தக் குழந்தைகள் கொல்லப்படுவது கண்டும் உலக நாடுகள் இன்னமும் மௌனமாக இருக்கின்றனவே அதுதான் மிகப்பெரும் கொடுமை.

இதைத்தான் ஸ்கொட்லாந்தின் பிரதமர் மிக நுட்பமாக உலக நாடுகள் தமது மௌனத்தைக் கலைக்க காசாவில் இன்னும் எத்தனை குழந்தைகள் பலியாக வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

இந்தக் கேள்வி இந்த உலகில் நடக்கின்ற கொடூரங்களுக்கு எதிரான நீதி வார்த்தையாக நிச்சயம் நிலைக்கும்.

அதேவேளை காசாவில் குழந்தைகளையும் பெண்களையும் அப்பாவி பொதுமக்களையும் கண்மூடித்தனமாகக் கொன்று குவிக்கின்ற இஸ்ரேலின் கொடுமையைக் கண்டிக்காத நாடுகள் என்றோ அதற்கான பழியைச் சுமக்கும்.

ஆம், காசாவில் குழந்தைகள் கொல்லப்பட்டபோது உலக நாடுகள் மௌனமாக இருந்து மனித வதைக்கு ஆதரவளித்தன என்று பாடப்புத்தகங்களில் எதிர்கால மனிதர் படிப்பர். இது நிச்சயம் நடக்கும்.

அந்தப் பாடத்தின் தலைப்பாய் ஸ்கொட்லாந்துப் பிரதமர் முன்வைத்த பதிவு அமையும்.

# அரச வைத்தியசாலைகளில் நோயாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

## வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ்

அரச வைத்தியசாலைகளில் கட்டாயமாக நோயாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர்திருமதிபிஎஸ்எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாண போதனா வைத்திய சாலையில் இடம்பெற்ற இலவச கண் புரை சத்திர சிகிச்சை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றையதினம் (நேற்று) வைத்தியசாலையின் கண் சிகிச்சை பிரிவுக்கு வருகை தந்தபோது, வழமையாக அரச வைத்தியசாலைகளில் ஒருவித நாற்றம் காணப்படும் ஆனால் இன்று அதை உணரவில்லை. இது ஒரு தனியார் வைத்தியசாலை போல காட்சிஅளிக்கின்றது.

இங்கே அனைத்து விடயங்களும் தனியார் வைத்தியசாலை போல காணப்படுகின்றது. இதனை பார்க்கும்போது வியப்பாக இருந்தது.

எனவே இதனை செயல்படுத்துகின்ற யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மற்றும் கண் சிகிச்சைக்கு பொறுப்பான வைத்திய நிபுணர் மலரவன் ஆகியோருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார். (ம-7,33,104)

# நாட்டில் உயிரிழப்போர் எண்ணிக்கை அதிகரிப்பு

## கணக்கெடுப்பில் அதிர்ச்சி தகவல்

இந்த நாட்டில் உயிரிழப்போரின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இந் நிலைமை காணப்படுவதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, 2012 ஜூலை முதல் 2013 ஜூன் வரை இலங்கையில் பதிவான இறப்புகளின் எண்ணிக்கை 125,626 ஆக பதிவாகியுள்ள போதிலும், 2022 ஜூன் முதல் 2023 ஜூன் வரை இலங்கையில் நிகழ்ந்த இறப்புகளின் எண்ணிக்கை 190,600 என்று தெரிவிக்கப்படுகிறது.

2022 ஆம் ஆண்டைவிட 2023 ஆம் ஆண்டில் நாட்டின் சராசரி ஆண்டு மக்கள் தொகை 144,345 ஆக குறைந்துள்ளதாகவும் அறிக்கைகள் காட்டுகின்றன.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் கூற்றுப்படி, பிறப்பு எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து, இறப்பு படிப் படியாக அதிகரித்து வருகிறது.

எவ்வாறாயினும், இந்த மரணங்கள் படிப்படியாக அதிகரித்து வருவதற்கான காரணம் கண்டறியப்படவில்லை. மேலும் இந்த நாட்டில் கோவிட் பரவியதன் பின்னர் இந்த நிலைமை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொவிட் தடுப்பூசி குறித்து பல்வேறு தரப்பினரிடையே பல்வேறு கருத்துகள் இருந்தாலும், இது தொடர்பாக இதுவரை குறிப்பிட்ட தகவல்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.(ம)

## உரங்களுக்கான விலை நிர்ணயம் தொடர்பில் அரசாங்கம் ஆராய்வு

(கொழும்பு)

உரங்களுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. விவசாயிகளுக்கு அதிக விலைக்கு உரங்கள் விற்பனை செய்யப்படுவதாக விவசாய அமைச்சுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இருப்பினும், கட்டுப்பாட்டு விலை குறித்து இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை என விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

உர விற்பனை தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வுகள் மற்றும் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக உரிய விசாரணை நடத்தப்பட்டதன் பின்னரே இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. (5-6)

## ஓகஸ்ட் மாதத்திற்கான கொடுப்பனவுகள் நாளை

(கொழும்பு)

ஓகஸ்ட் மாதத்திற்கான அஸ்வெசும கொடுப்பனவுகள் நாளை முதலாம் திகதி பயனாளிகளின் கணக்கில் வைப்பிலிடப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்காக 8.5 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த நிதியாண்டில் 1.36 மில்லியன் பயனாளி குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்படும்.

மேலும் செப்டெம்பர் மாதத்திற்கான உதவித் தொகையானது நவம்பர் மாதத்தில் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த நலத் திட்டத்திற்கு தெரிவு செய்யப்படாத விண்ணப்பதாரர்களின் பரிசீலனை நவம்பர் 6 முதல் 12 வரை இடம் பெறும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (5-6)

## மோசமான வானிலையால் இலங்கை விமானங்கள் இந்தியாவில் தரையிறக்கம்

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான 2 விமானங்கள் மோசமான வானிலை காரணமாக இந்தியாவின் திருவனந்தபுரம் விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளன.

ஜகார்த்தாவில் இருந்து கொழும்பு வந்த UL 365 விமானமும், மாலைதீவில் இருந்து UL 116 விமானமும் இவ்வாறு இந்தியாவில் தரையிறங்கியுள்ளன.

மோசமான காலநிலை காரணமாக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள விமான நிலையங்களில் தரையிறங்க முடியாதநிலையில் விமானங்கள் இந்தியாவின் திருவனந்தபுரம் விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டன.(ம-7)

## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான காப்பீட்டுத் தொகையை அதிகரிக்க முடிவு

அடுத்த வருடத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்படும் காப்புறுதித் திட்டம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

இதன்போது, 2024 ஆம் ஆண்டிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான காப்புறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவித்துள்ளார்.

மேலும், குறித்த திட்டத்தை வருடாந்த வரவு - செலவுத் திட்டத்தின் ஒதுக்கீடுகளுடன் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் செயற்படுத்தவுள்ளதாக கூறப்படுகிறது.

அத்தோடு, பாராளுமன்ற உறுப்பினர்களின் வயது வரம்பில் ஏற்பட்ட மாற்றம் மற்றும் சமூக பாதுகாப்பு வரி திருத்தங்களின் பொருட்டு வரித்தொகையில் ஏற்பட்ட மாற்றம் மற்றும் அறவிடப்படும் மதிப்பில் ஏற்பட்ட மாற்றம் என்பனவற்றாலேயே காப்புறுதித் திட்டத் தொகை அதிகரிக்கப்படுவதாகவும் பிரதமர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.(ம-7)

## இறக்குமதி பொருட்களின் விலைகள் அதிகரிக்கலாம்

(கொழும்பு)

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகள் அதிகரிக்கலாம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்துக்கு இடையே நிலவும் மோதல்கள் காரணமாக இவ் விலை அதிகரிப்பு ஏற்படவுள்ளதாக கூறப்படுகிறது.

அத்தோடு, கப்பல் நிறுவனங்கள் தமது காப்புறுதி கட்டணத்தை உயர்த்தியுள்ளதன் காரணமாகவும் இவ்வாறு விலை அதிகரிக்கக் கூடுமென தெரியவந்துள்ளது.

இந்நிலையில், தற்போதைய யுத்த சூழ்நிலையில் கப்பல்கள் சுயஸ் கால்வாயில் பயணிப்பதால் அபாய காப்புறுதி கட்டணத்தை அக் கப்பல் நிறுவனங்கள் அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

24



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

### போத்துக்கீசரின் குற்றச்சாட்டு

போத்துக்கீசரைப் பகைக்காது இருப்பதற்காகப் பல நடவடிக்கை களை எதிர்மன்னசிங்கம் மேற் கொண்டபோதும், போத்துக்கீச ருக்கு எதிராகக்கண்டியரசன் தென் னிந்தியாவில் இருந்து போர் வீரர்களைப் பெற்றுக் கொள்வதற்கு, இவன் உதவுகிறான் என்ற குற்றச் சாட்டு எழுந்தது. இந்துத் துறவி களைப் போலவேடமிட்டு இவர்கள் யாழ்ப்பாணத்துக் கூடாகச் செல் கிறார்கள் எனப் போத்துக்கீசர் குற்றஞ் சாட்டினர். அவர்கள் உண் மையான துறவிகள் என்றும் சிவ னொளிபாத மலைக்கு யாத்திரை போகிறவர்கள் என்று விளக்கியும் போத்துக்கீசர் அதனை நம்பவி ல்லை. இதனால் எதிர்மன்ன சிங் கம் 300 துறவிகளைப் பிடித்து அவர் களைக் கட்டாயமாகத் தோணி களில் ஏற்றிக் கடலில் விட்டான்.

### மதமாற்ற முயற்சி

கத்தோலிக்கக் குருமார்கள் அர சனைக் கத்தோலிக்க மதத்துக்கு மாற்றுவதற்குப் பெரு முயற்சி செய்தனர். அவ்வப்போது இணங் குவது போல் காட்டிக் கொண்ட போதும், இதற்கான உறுதியான நடவடிக்கைகள் எதையும் எடுக் காமல் தட்டிக்கழித்து வந்தான். இதற்காகச் சங்கிலிகுமாரனைக் குருமார்கள் குற்றம் சாட்டினர். இறுதியாக அரசன் மரணப்படுக் கையில் கிடந்தபோது அவனை மதமாற்றம் செய்ய எடுத்த முயற் சியையும் சங்கிலிகுமாரன் தடுத்து விட்டதாகத் தெரிகிறது.

### மரணம்

எதிர்மன்னசிங்கம் போத்துக் கீசரின் உதவியுடன் 25 வரு டங்கள் யாழ்ப்பாணத்தை ஆண டான். 1616 ஆம் ஆண்டில் இவன் நோய்வாய்ப்பட்டு மரணமானான். பட்டத்துக்கு உரிமையுள்ளவனாக இருந்த இவனது மகன் சிறுவனாக இருந்தான். உரிய வயது வரும் வரை அவனையும், நாட்டையும் பாதுகாக்கும் பொறுப்பைத் தனது மாமனான அரசகேசரியிடம் அர சன் ஒப்படைத்திருந்தான். எனி னும், அரசகேசரியைக் கொன்று இப்பொறுப்பைச் சங்கிலிகுமாரன் எடுத்துக் கொண்டான்.

### அரசகேசரி (1615-1617)

அரசகேசரி, யாழ்ப்பாணத்தை ஆண்ட பரராசசேகரச்சக்கரவர்த் தியின் மருமகனும், எதிர்மன்ன சிங்கம் என்னும் யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்த ஆரியச்சக்கரவ ர்த்தியின் மாமனும் ஆவார். பொன்பற்றியூர் பாண்டிமழவன் மரபுவழித் தோன்றிய அரசகேசரி பரராசசேகரச்சக்கரவர்த்தியின் இர ண்டாம் மனைவியாகிய வள்ளியம் மையின் மகளாகிய மரகத வல்லி யின் கணவராவார். மரணப்படுக் கையில் இருந்த எதிர்மன்னசிங்க னால் தன் மகன் வயதுக்கு வரும் வரை இராச்சிய பரிபாலனம் செய்யும் படி வேண்டப்பட்டவர் அரசகேசரி ஆவார். எதிர்மன்ன சிங்கனின் நியமனத்தைப் போர்த்துக்கேய தேசாதிபதி ஏற்குமுன் சங்கிலிகு மாரனாற் கொல்லப்பட்டவர்.

இவர் ஒரு புலவர் ஆவார். ஆரி யச்சக்கரவர்த்திகளின் அரசவைப் புலவர். வடமொழி, தென் மொழி களில் புலமைபடைத்த இவர் பல செய்யுள்களைப் பாடியுள்ளார். வட மொழியில் காளிதாசரால்இயற்றப் பட்ட "இரகுவம்சம்" என்ற நூலினை தமிழில் மொழி பெயர்த்துள்ளார். செய்யுள் வடிவில் அமைந்த இந் நூலில் 2404 பாடல்கள் அடங்கி யுள்ளன. இவர் வாழ்ந்த அரண் மனை நல்லூர் யமுனா ஏரிக்கு அருகாமையில் இன்றும் அரசகேசரி வளவு நிலப்பரப்பில் அமைந் திருந் தது என்பர். அரசகேசரி ஆலயம் யாழ்ப்பாணத்தில் நீர்வேலி ஊரில் உள்ளது.

காரைதீவு கா. சிவசிதம்பர ஐயர் 1887-ஆம் ஆண்டில் சென்னையில் பதிப்பித்து வெளியிட்ட தட்சிண புராணப் பதிப்பில் அரசகேசரி சிறப்புப் பாயிரமொன்று இயற்றியுள்ளார். அகநானூறு, சிலப்பதிகாரம், மணி மேகலை போன்ற காப்பியங்களில் தேர்ச்சியுடையவர்.

### சங்கிலி குமாரன் (1617-1620)

சங்கிலிபண்டாரம் அல்லது இரண் டாம் சங்கிலி அல்லது ஒன்பதாம் செகராசசேகரன் (இறப்பு: 1621) யாழ்ப்பாண அரசின் கடைசி அரசன். தொடக்க காலங்களில் யாழ்ப்பாண வரலாறு எழுதியவர்கள் இவனை யும், இவனுக்கு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன் ஆண்ட சங் கிலி என்பவனையும் ஒருவர் எனக் கருதி மயங்கினர். 18 ஆம் நூற் றாண்டில் யாழ்ப்பாணவைபவ மாலை எனும் பெயரில் யாழ்ப்பாண வரலாறு எழுதிய மயில்வாகனப் புலவர் பெயர் ஒற்றுமையால் குழம் பிப் போலும், இடையில் ஆண்ட பல அரசர்களைப் பற்றிக் குறிப்பிடாமலே விட்டுவிட்டார்.

1591 ஆம் ஆண்டில் தளபதியான அந்தரேபூர்த்தாடு என்பவன் தல மையில் யாழ்ப்பாணத்தைக் கைப்ப ற்றிய போத்துக்கேயப் படைகள் யாழ்ப்பாண அரசனைக் கொன்று விட்டு எதிர்மன்ன சிங்கம் என்ப வனை அரசனாக்கினர். எதிர் மன்ன சிங்கம் இறந்தபோது அரசுக்கு வாரிசான அவனது மகன் குழந் தையாக இருந்தான். இதனால், அரசனின் மச்சினனான அரசகேசரி என்பவனைப் பகர ஆளுநராக நியமித்தனர். இதனை விரும்பாத சங்கிலிகுமாரன், அரசகேசரியைக் கொல்லுவித்து நிர்வாகத்தைத் தான் ஏற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறது. சங்கிலிகுமாரன் தொடக்கத்திலி ருந்தே போத்துக்கீசரின் நடவடிக் கைகளை எதிர்த்து வந்தான். போத் துக்கீசரிடம் தாராளமாக நடந்து கொண்ட அரசன் எதிர்மன்ன சிங் கம் தனது இறுதிக்காலத்தில் பாதி ரிமாரின் வற்புறுத்தலுக்கு இணங் கிக் கிறிஸ்தவமதத்தில் சேர உடன் பட்டதாகவும், எனினும் அவர்களின் முயற்சியைச் சங்கிலிகுமாரனே தொடர்ந்து முறியடித்து வந்ததா கவும், குவைறோஸ் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார்.

### சங்கிலிபண்டாரத்தின்மறைவு

சங்கிலிய பண்டாரம் என்றழை க்கப்படும் சங்கிலிகுமரன் அந்நி யரான போர்த்துக்கேயரின் ஆட் சியை தீவிரமாக எதிர்த்தான். இதன் முடிவாக போர்த்துக்கேயர் கொழும் பில் இருந்தும், இந்தியா கோவா வில் இருந்தும் 5000 போர் வீரர்கள் கொண்ட படைகளை அனுப்பி யாழ்ப் பாணத்தைக் கைப்பற்றினர். சங்கி லிகுமாரனை கைது செய்து கொழும் புக்கு கொண்டுச் சென்றப் போர்த்துக் கேயர், பின்னர் இந்தியா கோவா விற்கு கொண்டுச் சென்று அங்கே 1621 ஆம் ஆண்டு தூக்கிலிட்டனர்.

### சங்கிலிகுமாரனின் பிள்ளைகள்

சங்கிலிகுமாரனின் மூன்று பெண் பிள்ளைகளும் போர்த்துக்கேயரி னால் கோவா கொண்டுச் செல்லப் பட்டு, போர்த்துகேய அதிகாரிகளி னால் உதவியுடன் கல்வி கற்பிக் கப்பட்டுள்ளது. இவர்களுள் சங்கி லிகுமாரனின் மூத்த பெண் பிள்ளை போர்த்துக்கேய அரச குடும்பத்தில் திருமணம் முடித்துக் கொண்டாள். இவளின் பெயர் சொரர்மறியாடா விஸ்டாகோ (Soror Maria da Vistaco) ஆகும். இவள் 1637 ஆண்டளவில் கோவாவில் ஒரு முக்கிய அரசாங்கப்பதவியில் இருந் துள்ளதாகவும் அறியப்படுகின்றது. மேலும், இது சம்பந்தமான ஆவ ணம், யாழ்ப்பாண அரசனுடைய (King of Jaffna apataao (Ceylon)) மகள் இவள் எனவும் குறிப்பிடு கின்றது.

### சங்கிலிகுமாரனின் சிலை

1974 ஆம் ஆண்டில் இரண் டாம் சங்கிலியனுக்கு யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் சிலை வைக் கப்பட்டது. இச்சிலையை சிற்பி செல்லையா சிவப்பிரகாசம் என்பவர் செதுக்கினார். 1994 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தை இலங்கை இரா ணுவம் கைப்பற்றிய போது இச் சிலை இடித்து அழிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாநகரசபை 1996-ல் மீண்டும் சிமெந்தினால் செய்து அதே இடத்தில் வைத்தது. 2011 ஆம் ஆண்டில் இச் சிலை யாழ் மாநகரசபையால் உடைக்கப்பட்டு இந்திய சிற்பி கலிகைப் பெருமாள் புருஷோத்தமன் என்பவர் தலை மையில் உருவாக்கப்பட்டு 2011 ஆகஸ்ட் 3 ஆம் மீண்டும் திறந்து வைக்கப்பட்டது.

### சந்திரபானுவும் சாவகன் மைந்தனும்

ஆரியச்சக்கரவர்த்தி வம்சத்தின் ஆட்சிக் காலங்கள் பற்றி, கருத்து- எதிர்க் கருத்துகள் (வாதப் பிரதி வாதங்கள்) உண்டு. முதல் ஆரி யச் சக்கரவர்த்தியின் காலம் 13ஆம் நூற்றாண்டு என்றே நம்புகிறார் கள். இவ்வரசர்கள் பரராசசேகரன், செகராசசேகரன் என்ற சிம்மாசனப் பெயர்களை மாறிமாறி வைத்துக் கொண்டு அரசாண்டார்கள். இக் கட்டுரையில் பட்டியல் இடப்பட்ட அரசர்களை விட இன்னும் இரு அரசர்கள் யாழ்ப்பாண இராச்சி யத்தை ஆண்டார்கள் என்று கூறப்படுகிறது. அவர்கள் சந்திர பானுவும் அவ்வரசரின் மகனும் ஆவார்.

### சந்திரபானு 1255-1262

சந்திரபானு என்பவர் தாய் லாந்து நாட்டில் இருந்த தாமி ரலிங்க இராச்சியத்தை 1230-ஆம் ஆண்டில் இருந்து 1263-ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்த அரச ராவார். தென்தாய்லாந்தில் இவர் கட்டிய கோயில் மூலமும் பாண்டி யர் கீழ் சில ஆண்டுகள் இலங் கையை ஆண்டதன் மூலமும் அதிகம் அறியப்படுகிறார். மகாவம் சத்தின் படி இவர் தற்போதைய தாய்லாந்து நாட்டின் தாமிரலிங்க அரசை ஆண்ட தமிழ் கடற் கொள் ளையர்களின் தலைவன் ஆவார்.

இவர் 1247-ஆம் ஆண்டில் இரண்டாம் பராக்கிரமபாகு என் னும் சிங்கள் அரசனை எதிர்த்து தோல்வி அடைந்தார். பின்னர் பாண்டியர் உதவியுடன் சில ஆண் டுகள் வட இலங்கையை ஆண்டு, சில ஆண்டுகள் கழித்து பாண்டிய பேரரசை எதிர்த்தான்.

முதலாம் சடையவர் மன் சுந்தர பாண்டியன் என்னும் பாண்டிய வேந்தன் தலைமையில் நடந்த போரில் (1262- 1264) இவர் இரண்டாம் சடையவர் மன்வீர பாண்டியன் என்பவரால் கொல் லப்பட்டார். அதன் பிறகு இலங் கையிலுள்ள பாண்டியர் படையை எதிர்க்கும் கொள்கையும் தாமி ரலிங்க அரசை நிர்வகிக்கும் பொறுப்பும் இவரின் மகனான சாவகன் மைந்தன் கீழ்வந்தன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

தொடர்ச்சியாக நவம்பர் 06ஆம் திகதி வரை (அவ்வப்போது ) மழை கிடைக்கும் வாய்ப்புள்ளதாக யாழ்.பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா எதிர்வுகூறியுள்ளார்.

காலநிலை மாற்றம் தொடர்பில் நேற்றுக் காலை அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“2023- 2024ஆம் ஆண்டுக்கான வடகீழ் பருவக்காற்றுக்கான முதல் சுற்று மழை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் நேற்று அதிகாலை 4.00 மணியளவில் தொடங்கியுள்ளது.

இம் மழை தொடர்ச்சியாக நவம்பர் 06ஆம் திகதிவரை (அவ்வப்போது ) கிடைக்கும் வாய்ப்புள்ளது.

நேற்று முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் வட கிழக்கு திசையில் இருந்து காற்று வீசத் தொடங்கும்.

எனவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் மக்கள் இனிவரும் நாட்களின் எந்நேரத்திலும் மழை கிடைக்கலாம் என்ற எடுகோளினைக் கருத்தில் கொண்டு அதற்கான முன்னேற்பாடுகளுடன் தமது நடவடிக்கைகளை ( பயணங்கள் உட்பட)மேற்கொள்வது சிறந்து” என்றுள்ளது. (ம-7)

## வடமராட்சி...

னுள் அத்துமீறி நுழைந்து, வீட்டில் இருந்தவர்களின் அடையாள அட்டையை காண்பியுங்கள் என மிரட்டி அவர்களின் அடையாள அட்டைகளை பரிசோதித்துள்ளனர்.

பின்னர் வீடு புகுந்து சோதனையிட்ட கும்பல், வீட்டின் உரிமையாளர் காணி ஒன்றினை கொள்வனவு செய்வதற்காக வைத்திருந்த 5 இலட்ச ரூபாய் பணத்தினையும், அதனுடன் இருந்த 6 அரை பவுண் சங்கிலியையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

தம்மை அடையாளப்படுத்தாது, வீட்டினுள் திடீரென புகுந்து அடையாள அட்டைகளை பரிசோதித்து, வீட்டினையும் சோதனையிட்டு, பணத்தினை எடுத்து சென்றமை தொடர்பில் மருதங்கேணி பொலிஸாரிடம், வீட்டிற்கு வந்தது பொலிஸாரின் ஏதாவது பிரிவா? என வினவியபோது, அவ்வாறு யாரும் சோதனை நடவடிக்கையில் ஈடுபடவில்லை என பொலிஸார் தெரிவித்ததை அடுத்து, பொலிஸ் நிலையத்தில் சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-7,33,104)

## ஐம்பொன்...

நேற்று யாழ்ப்பாணம் ஐந்து சந்தி பகுதியில் வைத்து இந்தச் சிலை கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

சிலையை கடத்தி வந்தவர் தப்பி தலைமறைவாகிய நிலையில் தேடப்பட்டு வருவதாக பொலிஸார் கூறினார்.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் பரிசோதகர் ரி.மேனன் தலைமையிலான மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸாரால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியாவில் திருடப்பட்ட 30 லட்சம் ரூபாய் பெறுமதியான ஐம்பொன் சிலை ஒன்று யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அந்தப் பகுதிக்கு பொலிஸார் சென்றபோது அதனை கடத்தி வந்தவர் தப்பித்தார். சிலை கைப்பற்றப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,33,104)

## யாழ்.போதனா...

அசிஸ்ட் ஆர் ஆர் பிரித்தானியா அன் இலங்கை நிறுவனத்தின் ஏற்பாட்டில் அலாக்கா மற்றும் ஆனந்தா பவுண்டேஷனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனர்வாழ்வும் புதுவாழ்வும் நிறுவனத்தின் அனுசரணையில் உலக பார்வை தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் இரத்தினபுரி வைத்தியசாலைகளின் நல்லுறவினை மேம்படுத்தும் முகமாக இம்மாதம் 30ஆம் திகதி தொடக்கம் மூன்றாம் திகதி வரை கண்புரை சத்திர சிகிச்சை நடைபெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை கண் சிகிச்சை வைத்திய நிபுணர் மலரவனின் நெறிப்படுத்தலில் கண் சிகிச்சை பிரிவில் ஆயிரம் பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கான செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

நேற்றுக் காலை ஆரம்பமான கண்புரை சத்திரசிகிச்சையில் யாழ்ப்பாண சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இருந்து 50க்கும் மேற்பட்டோரும் மற்றும் அநுராதபுரம் மதவாச்சி, பதவியா பகுதிகளில் இருந்து 170க்கும் மேற்பட்டோருக்கு நேற்று சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது

எதிர்வரும் நாட்களிலும் குறித்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டு ஆயிரம் பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. (ம-7,33,104)

## நாடு முழுவதும்...

வித்து இந்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

தங்களுக்கு 20 ஆயிரம்ரூபாய்சம்பள உயர்வு கோரியும், 2016ஆம் ஆண்டில் இருந்து கொடுக்கப்படாமல் இருக்கின்ற ஓய்வூதியக் கொடுப்பனவை மீண்டும் வழங்க வேண்டும் என வலியுறுத்தியும் இந்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

வாழ்க்கைச் செலவை குறைத்திடு, மக்களுக்கு நிவாரணம் வழங்கு என பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம-7)

## ஐ.எம்.எப்...

கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தினை கூறியிருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

“2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் முற்றுமுழுதாக சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகளை அடிப்படையாக கொண்டே உருவாக்கப்பட்டுள்ளது

சர்வதேசநாணய நிதியத்தின் இரண்டாவது தவணைத் தொகையினை வெளியிடுவதற்காக அவர்களின் முன்மொழிவுக்கமைய இலங்கையில் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டது.

அதேபோல 2024ஆம் ஆண்டிற்கான பாதீட்டிலும் சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகளின் அடிப்படையிலேயே வரவு செலவுகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள அரச வருமானத்தினை 9 வீதத்தில் இருந்து 12 வீதமாக அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்காக 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக புதிய வரிகளை அறிமுகப்படுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதனாலேயே அரசாங்கம் இப்போது புதிய வரிகளை விதிக்க திட்டமிட்டுள்ளது, அதன்படி ஜனவரி 2024 முதல் செல்வ வரி மற்றும் பாரம்பரிய வரி என்பன அறிமுகப்படுத்தப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வருமான வரிக் கோப்புகளும் அடுத்த ஆண்டு (2024) ஜனவரி முதல் திறக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ம-7)

## மின்சாரத்துறை...

எக்ஸ் கணக்கில் வெளியிட்டுள்ள பதிவில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முன்மொழியப்பட்ட உத்தேச மின் சாரத்துறை சீர்திருத்த சட்டமூலத்திற்கு அமைச்சர்கள் குழு ஒப்புதல் அளித்த பிறகு, அது வர்த்தமானியாக வெளியிடப்பட்டு பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும். (ம-7)


கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3525 — சீட்டிழுப்பு திகதி 30.10.2023 — ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 15 44 56 79 — U — 79322 — தேசிய லொத்தர் சபை

தன நிதானய — திகதி - 2023.10.30 — சீட்டிழுப்பு இலக்கம் - 1313 — M 06 10 21 30 M — 12492

Lucky 7 — திகதி 30.10.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0109 — L7 இலக்கம் 13 — வெற்றி இலக்கினம் இடபம் — வெற்றி இலக்கங்கள் 6 5 1 7 0 1

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2023.10.30 — சீட்டிழுப்பு இலக்கம் 592 — மிதுனம் 02 20 32 50 மிதுனம் — தேசிய லொத்தர் சபை

மெகா பவர் — திகதி 30/10/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1631 — 0 22 01 17 53 74 — 44617

மஹஜன சம்பத — திகதி 2023/10/30 — சீட்டிழுப்பு இலக்கம் 5283 — S 5 9 3 1 4 8 — தேசிய லொத்தர் சபை

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2257 — வர்ணம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 2023.10.30 — தினம் திங்கட்கிழமை — வெற்றி இலக்கங்கள் 34 50 58 66 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,482,980.00 — DLB

சனிதா — திகதி 2023.10.30 — வெற்றி வாரம் 4418 — வர்ணம் இளம் நீலம் — 40 50 52 70 H — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,271,296.00 — 41268 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 3969 — வர்ணம் மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி 2023.10.30 — தினம் திங்கட்கிழமை — 06 26 38 49 — கன்னி — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,906,239.20/- — 720477 — 183 — மீனம் — DLB

கப்ருக — திகதி 30.10.2023 — வெற்றி வாரம் 1433 — வர்ணம் பசுமை — J 23 28 33 42 62 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 458,662,224.20 — 560147 — 666 — DLB தொலை பேசி 011-2 333 546-47 Web : www.dlb.lk

ஜயோதா Jayoda — திகதி 2023.10.30 — வெற்றி வாரம் 1969 — வர்ணம் செம்மஞ்சள் — 23 40 62 68 K — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,196,960.00 — DLB

ADA KOTIPATHI — திங்கட்கிழமை — வெற்றி வாரம் : 2083 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,484,880/- — சீட்டிழுப்பு திகதி : 2023.10.30 — 18 25 45 67 T — 518396 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ்.நகர், திருநெல்வேலி, கல்வியங்காடு, நல்லூர், கோப்பாய், கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் சிறிய குடும்பம் வசிக்கத்தக்க வீடு வாடகைக்குத் தேவை (C-7500)

**077 318 9474**


# நெடுந்தீவில் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு மேற்குப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு மேற்குப் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய குணாராசா தனுஷன் என்பவரே சடலமாக இனங்காணப் பட்டுள்ளார்.

அவரது உறவினர் வீட்டுக்கு அண்மையில் உள்ள ஆட்களற்ற வீட்டினை குறித்த இளைஞரே பராமரித்து வருவதாகவும், பகல்வேளைகளில் அவ்வீட்டில் படுத்து உறங்குவதாகவும் தெரிவிக்கப்படும் நிலையில் நேற்று அவரை காணவில்லை என வீட்டார் தேடிச் சென்றவேளை பூட்டிய வீட்டினுள் படுக்கையிலேயே இறந்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் நெடுந்தீவு பிரதேச பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு பொலிஸார் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.(ம-7)

## அரச...

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி இந்தக் கருத்துக்களை வெளியிட்டதாக, ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று பிற்பகல் கொழும்பிலுள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் தனியார் துறையினரின் சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பின்னணியில் உழைக்கும் மக்களின் சம்பளத்தை உயர்த்துவதே தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை எனவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைகேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17618) **076 825 7716** (ஆகாஸ்)

**IELTS - New Batch ஆரம்பம்**

இத்துடன் Basic & Advance Grammar Classes

இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.

077 798 9830 By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (17620)

**குத்தகைக்கு தேவை**

வான்கள் நீண்ட நாள் குத்தகைக்கு தனியார் கம்பனிக்கு தேவை. தகுந்த பெறுமதி வழங்கப்படும். (17591)

**077 971 5379**
**070 489 1279**

**றொம் ஏஸ் மாம்பழம் விற்பனைக்கு**

றொம் ஏஸ் மாம்பழம் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்கள் அல்லது நிறுவனங்கள் தொடர்பு கொள்ளவும்.

**075 719 0110**

**அமெரிக்க லொத்தர் விசா**

இன்னும் 7 நாட்கள் மட்டுமே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்

அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

திருமுருகன் கொம் நெற் 321, K.K.S Road, Jaffna. (17621)

**077 755 4528**

**CANADA VISITOR VISA**

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7529)

**0777-068-777** V2 TRAVELS

49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்

**அமெரிக்க அதிஸ்ட விசா** இன்னும் 03 நாட்களில் நிறைவடைகின்றன

LOADING

0768226244 55000 இலவச விசாக்கள்

நீங்களும் அமெரிக்காவில்...

V2 Travels மூலம் அமெரிக்க லொத்தர் விசாவிற்கு பதிந்து அதிஸ்டசாலியாக தெரிவு செய்யப்பட்டேன். அந்த கணத்தில் இருந்து எனது வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை உணர்ந்தேன். விசா கிடைத்த பின்னர் என்னை மதிக்காதவர்கள் கூட என்னை தேடிவந்தார்கள். (C-7529)

கடைசிவரை கூடவே துணையிருந்த V2 Travels க்கு எனது நன்றிகள்.

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

V2 TRAVELS 0768226236


**பதவி வெற்றிடம்**


- தமிழ் ரைப்பிங் மற்றும் கணனி பக்க வடிவமைப்பு

அனுபவமுள்ளவர்களும் பயிலுநர்களும் (இருபாலாரும்)

தகைமை : க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல்

**076 097 3121**

# மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 02 . 1946

மறைவு 28 . 10 . 2023

## நாகலிங்கம் கணேசு

**(ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்)**

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கணேசு அவர்கள் கடந்த 28.10.2023 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் V.S கணபதிப்பிள்ளை - பத்மாவதி தம்பதியினரின் அன்பு மருமகனும் பாலரூபியின் அன்புக் கணவரும் தேவகி (நோர்வே), பகிரதி, கமலதாசன்(நன்நடத்தை உத்தியோகத்தர் பருத்தித்துறை நீதி நிர்வாக பிரிவு), உஷாந்தினி(ஆசிரியர்-யா/ மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் விக்னதாசன் (நோர்வே), கார்த்திகா(தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை), சுதாகரன் (ஆசிரியர்-யா/ வண். ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரவீன், பிரித்தா, தருண்ஜன், கவிஷ்ணா, அபிரன், ஆதுரி ஆகியோரின் அன்புப் பேரனும் அமரர்களான நல்லம்மா, குணசிங்கம், நாகேஸ்வரி மற்றும் பராசக்தி, தேவராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

முதலியார் கனகசபை வீதி, மானிப்பாய்.
077 601 2996
021 225 6550
(C-7527)
தகவல் : குடும்பத்தினர்

# 49வது அகவை தின நினைவலைகள்

அமரர் **வேலுப்பிள்ளை அன்பழகன்**



பண்பறிந்து பாரில் விஞ்சிநின்ற கல்வியாளன்

கல்வியால் கேள்வியால்
கனிந்த மனத்துதித்த
நல்லியைப் பண்பினால்
பயன்கருதாப் பணியினால்
எல்லவரும் ஏத்த நின்ற
அன்பின் அழகா
வல்லாளன் என்று கைப்பற்றி வாழ்வில்
பொல்லாத பாசப் பிணைப்பில்
தென்றலென நிற்க
இல்லாத புயலொன்று
இடைப்பட்டு வீசியதால்
சொல்லொணாத் துயரத்தில்
மிதக்க விட்டு ஏகிடினும்
இல்லத்தே நிறைந்து
எமக்குரமாய் இருக்குமந்த
நல்ல நினைவுகளால்
நான் நாளாய்ப் போற்றுகின்றோம்
வல்லநாற் பத்தொன்பதுவும்
பிறந்ததினால் வணங்குகின்றோம்
ஓம் சாந்தி!

என்றும் நினைவில் மலரும்
மனைவி, மக்கள்

(17617)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org